ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

சமய – சமூக – இலக்கிய வெளியீடு



MERCIFUL LIKE THE FATHER

ஆகஸ்ட் - 2016

50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஒகஸ்ட் - 2016

மலர் - 48 இதழ் - 07

**ஆசிரியர்**

அருட்தந்தை. ரமேஷ் கிறிஸ்றி

**இணை ஆசிரியர்**

மெற்றில்டா இராஜேந்திரம்

**துணை ஆசிரியர்**

பெஸ்லியோ வாஸ்

**கணினி வடிவமைப்பு**

சுபாஜெனி சங்கர்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் – 44
மட்டக்களப்பு.

**பதிப்பகம்**

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே....


அன்புடன் உங்களோடு ........ 01
விண்ணகத்தின் விடிவிளக்கு ........ 02
இயேசுவின் மகா பரிசுத்த ........ 03
ஆனந்தமாக வாழத் தயாரா ........ 04
வாக்குமூலம் ........ 05
நூற்றாண்டில் கால் பதிக்கும் ........ 06
மரணத்திலும் அவன் ........ 07
கத்தோலிக்கத் திருமறை ........ 08
தன்னடக்கம் ........ 09
இறை இரக்கத்தை ........ 10
எண்ணிப்பார்க்கையில் ........ 11
பேசுவதும் ஒரு கலை ........ 12
மருத்துவம் ........ 14
சமைக்கலாம் ருசிக்கலாம் ........ 15
புனிதர்களை அறிவோம் ........ 16
காணாமல் போனதையா ........ 17
இதுதான் அரசியல் ........ 18
சின்ன விசயங்கள் சிறந்த ........ 19
மாணவர் பக்கம் ........ 20
உலகெங்கும் மரியாள் ........ 21
தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் ........ 22
திருஅவைச் செய்திகள் ........ 24
ஆலயம் செல்வது ஏன் ........ 25
மருதமடு மாதாவே ........ 26
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: battiscc@gmail.com


விலை : 50/=
ஆண்டுச் சந்தா : 550/=
(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு....

ஆவணித் திங்கள் 15ம் நாளன்று நாம் தூய கன்னிமரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். கருவிலே திருவாய் நிறைந்தவர் அவர். காலந்தோன்றாப் பொழுதிலேயே இறைவனின் எண்ணத்தில் இருந்தவர். சுதனுக்குத் தாயானதால், இறைவனின் தாய் எனப் பேறு பெற்றவர். அவரது திரு உதரம் கிறிஸ்து பெருமானை ஏந்தியது; கரங்கள் தொட்டன; பாலூட்டிச் சீராட்டிக் கண்ணிமை போலக் காத்தமை இவையெல்லாம் அவருக்குத் தந்த பரிசு ஆன்ம சரீரத்துடன் விண்ணகம் ஏடுத்துக்கொள்ளப்பட்ட மகிமை.

இதற்கெனத் தூய மரியா கொடுத்த விலையோ துன்பம், துன்பம், துன்பம், ஏழு சோக வாட்கள் அனுதினமும் நினைக்குந்தோறும் அவரைத் துன்புறுத்தின. வெளியில் இவற்றைக் கூறாது தனக்குள்ளேயே வைத்துச் சிந்தித்துத் துயருற்றவர். இதுவே அவர் கொடுத்த விலை. ''இதோ ஆண்டவரின் அடிமை'' என்று கூறிய கணத்திலிருந்து இறைசித்தத்தைத் தாழ்ச்சியுடன் ஏற்று வாழ்ந்தவர் தான் தூய மரியா. எனவே, தாய்த் திருச்சபையோடு நாமும் இணைந்து அவர் புகழ்பாடி விழாவெடுத்துச் சிறப்பிப்பது சாலவும் சிறந்தது.

ஆவணி மாதத்தில் மருதமடுத் திருத்தலமும் சிறப்புப் பெறுகிறது. சாதி, இன, மத, மொழி என்ற பேதமின்றி அன்னையை நாடி ஓடிவரும் பக்தர்கள் தொகை இன்று அதிகரித்துக்கொண்டே வருகிறது. அன்னையிடம் வரங்கேட்டு நாடிவருவோரை அவர் கைவிடுவதில்லை என்பது இதிலிருந்து தெரிகிறது. யுத்த காலத்தில் மடு மாதாவின் அடைக்கலம் எத்தகைய முக்கியத்துவம் பெற்றிருந்ததென்பது எமக்குத் தெரியும்.

தூய மரியாவைத் தூற்றுவோர் கூட அவரது பக்தர்கள் எந்நாளும் அவர் பதம் நாடு வதைத் தடுக்க முடிவதில்லை என்பது கண்கூடு.

இன்றைய காலகட்டத்திலே எமக்கு ஒரு வழித் துணையாய் நின்று காக்க அன்னையை நாடுவதே சிறந்தது. யுத்தம் ஒழிந்தபோதும் எச்சங்கள் மறையவில்லை. வாழ்ந்த இல்லிடம் இழந்து, மீளவும் அதனைப் பெறமுடியாது தவிக்கும் மக்கள் ஒரு புறம். மண் சரிவில் அகப்பட்டு இருக்க இடமின்றி அல்லலுறும் மக்கள் மறுபுறம். கண் துடைப்பாகச் சில இல்லங்கள் வழங்கியும் வழங்காமலும் உள்ள நிலையும், சுதந்திர வாழ்வுக்குப் பங்கம் விளைவிக்கும் தீயவர்களும், போதைப்பொருள் வர்த்தகத்தில் பணமோகங் கொண்டு மனச்சாட்சி இன்றி பிறர் வாழ்வை அழிக்கும் சுயநலவாதிகளும், சிறுவர்களைப் பல வகையாலும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கும் கயவர்களும் இல்லாதொழிய அலகையை மிதித்த அன்னையை நாடுவோம்.

அவர் தம் பரிந்துரையால் அருள்பெற்றுத் தருவாரென நம்புவோம். எனவே, செபிப்போம். இடைவிடாது செபிப்போம். எமது நாடு விடியலைக் காண மாசில்லாத அன்னை, வான்லோக இராணி என்றுமே அன்போடு எம்மை அரவணைக்க வேண்டுவோம்.

– இளைய அதிபர் –

இறைவாக்கு

**"கடவுளே! எனக்கு இரங்கும், எனக்கு இரங்கும்; நான் உம்மிடம் தஞ்சம் புகுகின்றேன்"**

– திருப்பாடல்கள் 57:1 –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணகத்தின் விடிவிளக்கு

அருட்சகோதரி ஜூட்லஸ் F.M.M



அன்னை மரியாள் ஓர் அணையா விளக்கு. நாமெல்லாம் விண்ணக இன்பத்தை மரியாள் போல் சுவைக்க நாம் நம்மைத் தயாரிக்கின்றோமா அல்லது காலமெல்லாம் துன்பத்தை அனுபவிக்கும் சாத்தானின் வழியில் பயணம் செய்கின்றோமா? என்பதைச் சிந்தித்துப் பார்ப்போம்; சீர் செய்வோம். ஆவணித் திங்கள் 15ம் நாள் மரியன்னையின் விண்ணேற்பு விழாவைக் கொண்டாடி மகிழ அன்னை யாம் திருச்சபை எம்மைக் கூவி அழைக்கின்றது.

நாம் மரியன்னையின் புகழை எம் நாவால் போற்றிப் புகழ்ந்து பாடுவதுடன் நம் வாழ்வால் அன்னையின் அற்புத வாழ்வைப் பிறரும் வாழ வழிகாட்டுவோம். அன்னையின் பாதை தூய பாதை, அன்புப் பாதை, தாழ்மையின் பாதை, தயவுப் பாதை. இதை நாம் அடுத்தவரும் வாழ எம் வாழ்வாலும், நாவாலும் எடுத்துரைப்போம்.

மரியாள் பாவத்தின் இருளில் படுத்துறங்குவோருக்கு ஒளியேற்றி வைப்பவள். பாவிகள் மனம்மாற நாமும் அயராது உழைப்போம். மரியாள் மண்ணில் வாழ்ந்தபோது ஓர் உத்தம குடும்பப் பெண்ணாக புனித சூசையப்பரோடு இணைந்து இயேசுவை உத்தம புத்திரனாக வளர்ப்பதில் அயராது உழைத்தார். சில சந்தர்ப்பங்களில் இயேசுவின் ஏழ்மை வாழ்வும், அவரைப் பற்றி அடுத்தவர் கூறிய வார்த்தைகளும் மரியாளை ஆழ்ந்த சிந்தனையில் மூழ்க வைத்தன. எடுத்துக்காட்டாக, லூக்கா 2:29-35 வசனங்களில் சிமியோன் கூறிய வார்த்தைகள் அவள் உள்ளத்தை ஊடுருவிச் சென்றன. "இதோ இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும், எழுச்சிக்கும் காரணமாயிருக்கும் எதிர்க்கட்சியின் அடையாளமாகவும் இருக்கும்.... உமது உள்ளத்தையும் ஓர் வாள் ஊடுருவிப் பாயும்" என்றார். இவ்வார்த்தைகளை மரியாள் தன் உள்ளத்தில் வைத்துச் சிந்தனை செய்தாள். ஆனால், அதை அலசி ஆராயவோ யாரிடமும் செல்லவுமில்லை, சொல்லவுமில்லை.

அன்னை மரியாள் எமது விடி விளக்கு. அவள் கூறும் அறிவுரையின்படி நம் நாவைக் காப்போம். நல்லதைச் செய்வோம்; நலமுடன் வாழ்வோம். நாமும் அன்னை மரிபோல் இறப்பின் பின் இன்பமாக மகிழ்வுடன் வாழ்வோம் விண்ணகத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவின் மகா பரிசுத்த திருஇருதயச் சபை

## - புளியந்தீவு -



இல்லங்கள் தோறும் திரு இருதய அரசாட்சியை நிறுவுவதன் மூலம் திரு இருதயநாதர் பக்தியைப் பரப்பும் பணியில் நமது புளியந்தீவுப் பங்கில் திரு இருதயச் சபை ஈடுபடுகின்றது. 1647ஆம் ஆண்டு தொடக்கம் 1690ஆம் ஆண்டு வரை பிரான்சில் வாழ்ந்த அருட்சகோதரியான மார்க்கரித் மரியம்மாளுக்கு நமதாண்டவர் காட்சி கொடுத்து மனிதர்மீது கொண்டுள்ள அன்பினால் பற்றியெரியும் தமது திரு இதயத்தைக் காண்பித்தார். திரு இருதயப் பக்தியை மக்கள் மத்தியில் பரப்புமாறும் கூறினார். எனினும், வத்திக்கான் இவ்விடயத்தில் அக்கறை காட்டாமையால் இப்பக்தி பரப்பப்படவில்லை.

இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் இயேசு - மரியாள் திரு இருதயச் சபையைச் சேர்ந்த அருட்திரு. மத்தியூ கிறோலி (*Mateo Crawley*) திரு இருதயப் பக்தியைப் பரப்பும் முயற்சியை மேற்கொண்டார். இதற்குப் பாப்பரசரின் அங்கீகாரமும் ஆதரவும் கிடைத்தன. அருட்திரு. மத்தியூ இம் முறையைப் பரப்புவதற்காகக் கையாண்ட வழிமுறையே இல்லங்களில் திரு இருதய அரசாட்சியை நிறுவும் சடங்காகும். இதன்மூலம் குடும்பங்கள் முழுமையாக திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்கப்படுகின்றன.

நமது பங்கில் பங்குத்தந்தை அருட்திரு. A. தேவதாசன் அடிகளாரின் முயற்சியால் 14.06.2015 இல் திருஇருதயச் சபை ஆரம்பிக்கப்பட்டது. அன்று காலை 7.30 மணி திருப்பலியில் சபை அர்ப்பணிக்கப்பட்டு ஆரம்பமானது.

சபையில் தற்போது 15 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். திருஇருதய அரசாட்சியை நிறுவ விரும்பும் குடும்பங்களின் இல்லங்களுக்குச் சபையினர் குருவானவருடன் சென்று இறைவேண்டலில் ஈடுபடுகின்றனர். மாதாந்தம் தமது சபைக் கூட்டங்களைக் கிரமமாக நடாத்தி வருவதுடன் செப வழிபாடுகளிலும் ஈடுபடுகின்றனர். அத்துடன் பங்குகளில் நடக்கும் ஆன்மீக நிகழ்வுகளிலும் பங்குகொண்டு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

தமது சபையின் முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுமுகமாக, 05.06.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணி திருப்பலியைச் சபையினர் சிறப்பித்து மகிழ்ந்தனர். தொடர்ந்து, தமது மகிழ்வின் அடையாளமாக, வசதி குறைந்த மாணவியொருவருக்குப் பாடசாலை உபகரணங்களை வழங்கினர்.

தகவல் :

**இயேசுவின் மகா பரிசுத்த திருஇருதயச் சபை,**
புளியந்தீவு.

**சீராக் 41:12-13**

**"உன் பெயரைப்பற்றி அக்கறை கொள்; ஆயிரம் பெரிய பொற் புதையல்களை விட உனக்கு அது நிலைத்து நிற்கும்.**
**நல்வாழ்க்கை சில நாள்களே நீடிக்கும்; நற்பெயர் என்றென்றும் நிலைக்கும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தமாக



கடந்த ஜூனில், ஜப்பானிய காட்டு மலைப் பகுதியில் தனது பெற்றோர்களுடன் சென்ற யமாட்டோ தனூக்கா எனும் ஏழு வயதுச் சிறுவன், கற்களை எறிந்ததற்குத் தண்டனையாக அவனது பெற்றோரால் காட்டில் தனியாக விடப்பட்டான். ஆறு நாட்களுக்குப் பிறகு காட்டில் இராணுவப் பயிற்சி முகாம் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டான். தவறை உணர்ந்த தந்தை, மகனிடம், மகனின் பள்ளியிடம், மீட்புக் குழுவினரிடம், தான் துன்பம் கொடுத்த எல்லாரிடமும் கண்ணீரோடு மன்னிப்புக் கோரினார். தன் மகனும் தன்னை மன்னித்து விட்டதாகக் கண்ணீர் மல்கத் தெரிவித்தார். ஆனால், மனித நடமாட்டம் இல்லாத காட்டில், இரவு நேரத்தில், பசியோடு, ஒரு கூடாரம் தெரியும்வரை, தனியாக, சில கிலோமீட்டர் தூரம் நடந்து சென்ற அச்சிறுவனின் மனது எப்படியிருந்திருக்கும்! ஆயினும், அவன் தந்தையை ஏற்றுக் கொண்டுள்ளான். இப்படிச் சிறுவயதில் எத்துன்பமும் தெரியாமல், புரியாமல் ஆனந்தமாகத் துள்ளி விளையாடும் குழந்தைகள், பள்ளிப் பருவம் வந்தவுடன் பலவித மன அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். பள்ளி, பள்ளி முடிந்து டியூஷன் ..... பெற்றோரின் கௌரவக் கனவுகள் ... போன்றவை குழந்தையின் ஆனந்த வாழ்வைத் திருடிவிடுகின்றன. குழந்தைப் பருவ இன்பங்கள் நசுக்கப்படுகின்றன. பெற்றோருக்கு குடும்பக் கௌரவம், புகழ், வசதி வாய்ப்பு, போட்டிகளில் முதலிடம், பணம் இவையே முக்கியமாகத் தெரிவதால், குடும்பத்தில் எப்போதும் பதற்றம், மன அமைதியின்மை, மகிழ்ச்சியின்மை நிலவுகின்றன.

ஒருமுறை கறாரான ஒரு வயதான பெரியவர் இறக்கும் நேரத்தை எட்டிக் கொண்டிருந்தார். அவருக்கு அவ்வப்போது நினைவு திரும்பியது. ஒருமுறை நினைவு திரும்பியவுடன், "மூத்தவனே எங்கே இருக்கிறாய்?" என்றார். அவர், "இங்கேதான் இருக்கிறேன் அப்பா" என்றார். பின் கண்ணை மூடிவிட்டார். சிறிது நேரம் சென்று, கண்ணைத் திறந்து, 'நடுவனே, நீ எங்கே இருக்கிறாய்?' என்றார். அவரும் "உங்கள் கட்டிலுக்கு அருகேதான் இருக்கிறேன் அப்பா" என்றார். பின் கண்ணை மூடிவிட்டார் பெரியவர். இன்னும் சிறிது நேரம் சென்று, நினைவு திரும்பியதும், "இளையவனே, என் மகனே, நீ எங்கேயப்பா இருக்கிறாய்?" என்றார். அவரும், "உங்க பக்கத்திலேதான் இருக்கறேன் அப்பா" என்றார். "சரி மூணு பேரும் இங்க இருந்தா கடையை யார் பார்ப்பார்" என்றாராம் பெரியவர்.

அன்பு இதயங்களே, இப்படி ஒரு குடும்பம் இருந்தால், அங்கே என்ன இருக்கும்? குடும்பம் என்பது, வெறும் பணம், புகழ், மதிப்புத் தேடும் இடமா?

# வாழத் தயாரா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கசப்பான வாழ்க்கையை விடச் சாவே சிறந்தது; தீராத நோயைவிட நிலைத்த ஓய்வே உயர்ந்தது" - (சீராக் 30:17)

"உள்ள மகிழ்ச்சியே மனிதரை வாழ வைக்கிறது; அகமகிழ்வே மானிடரின் வாழ்நாளை வளரச் செய்கிறது" - (சீராக் 30:22)

# வாக்குமூலம்

காலமழை பெய்யும்
கன பயிர்கள் செழிக்கும்
புல்லும் பூக்கும்
நெல்லும் தலை சாய்க்கும்
இயற்கை கனிமங்களும்
வேதியற் கலவைகளும்
என்னை வளமாக்கும்
கற்பூர மணம் கமழும்
சந்தன வாசம் இழையும்
பாடல்பெற்ற பூமித்தாய்
திருக்கேதீஸ்வரத்தாள்
நேற்றுவரை.

ஓர் இருண்ட காலத்தில்
என் சுயத்தைப் பறித்துப் போயினர்
அடிவயிற்றில்
பிணங்களது விதைப்பு
மடிந்தும் மடியாமலும்
கதறல்களும் கண்ணீரும்
முனங்கல்களும் மூச்சுமுட்டல்களும்
புதைக்கப்பட்டன
இல்லை விதைக்கப்பட்டன
என்ன செய்வேன்
என் கையாலாகாத்தனம்
இதோ
கண்ணீர்த்தாரைகளாய் ....

திரும்பிப் பாருங்கள்
ஓராயிரம் உலகத்தரகர்கள்
உண்மையெது, பொய்யெது
விலைபேசும் பண்டங்களாய்
அலைந்தலைந்து

அல்லல்படும் ஆன்மாக்கள்
உருக்குலைந்து கிடக்கும்
எலும்புக்கூடுகள்
வேதியல் மாறிப்போய்
மக்கிய மண்திட்டுகள்
அவலங்களே அரசியலாய் ...

மானிடத் தலைவிதிகள்
நேர்கோடுகளல்ல
அதற்காக
தசமப் புள்ளிகளாய்
தொலைக்கப்படலாமா?
விடைதெரியாத வினாக்கள் பல.
தூரத்தில்
ஆக்காண்டி அடிக்கிறது
கும்மிருட்டு நீள்கிறது
இரத்தவாடைக்காய்
பல பேய்கள் அலைகின்றன

கண்மணிக்குள் கிடக்கும்
கடைசிக் காட்சிகள்
கபாலங்கள்
கனபரிமாணங்கள்
காலங்கள்
இவைதான்
நான் சுமந்த இனத்தின்
எச்சங்கள்

- பைந்தமிழ்க்குமரன் டேவிட் -

இவற்றுக்காகப் பிள்ளைகளை வளர்க்கும் இடமா? இல்லை, அன்பும், மகிழ்வும் நிலவுகிற இடமா? 'அங்கே செல்லாதே, இங்கே வா, இதைச் செய்யாதே, அதைப் பேசாதே' என்று எந்நேரமும் கட்டளையிட்டுக் கொண்டிருப்பது குடும்பம் அல்ல. பிள்ளை வளர்ப்பும் அல்ல. இது பிள்ளையின் மகிழ்வான வாழ்வுக்குத் தடங்கலாக இருக்கும். மாறாக, அன்பான, ஆனந்தமான, ஆதரவான சூழலை உருவாக்கித் தந்தால், கற்பனை செய்ய முடியாத அளவுக்கு, குடும்பத்தில் மகிழ்வான சூழல் உருவாகும். குடும்பம் மகிழ்வாய் இருந்தால், சுற்றியுள்ள சமூகமும் மகிழ்வாய் இருக்கும். 'புரிதலிலுள்ள மகிழ்வே, மிக உன்னதமான மகிழ்வு' என்கிறார் லியானார்டோ டா வின்சி. ஆனந்தமாக வாழ்வதை அறிந்திருந்தால் மட்டும் போதாது. அதனை வாழ்வதற்குத் தயாராக இருப்பதும் அவசியம்.

○ நன்றி : வத்திக்கான் வானொலி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டினில் கால் பதிக்கும் கல்லடி – டச்பார்




கல்லடி - டச்ப்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயமானது 1916ம் ஆண்டு அருட்பணி. செபஸ்தியான் லாசெராஸ் அடிகளாரினால் சிறு ஓலைக் குடிலாகக் கட்டப்பட்டது. 1923ம் ஆண்டிலிருந்து இவ்வாலயம் புளியடிக்குடாப் பங்கில் வாழ்ந்து வந்த இயேசுசபைத் துறவியான அருட்பணி. ஹொப்பெனோ அடிகளாரினால் பராமரிக்கப்பட்டு வந்தது. அக்காலப்பகுதியில் குறைந்தளவான கத்தோலிக்கக் குடும்பங்களே வசித்து வந்தன.

அருட்தந்தை. ஹொப்பெனோ இயேசுசபை அடிகளாரைத் தொடர்ந்து அருட்தந்தை. பீலிக்ஸ் கிளாக்சன் இயேசுசபை அடிகளாரின் பராமரிப்பில் இவ்வாலயம் காணப்பட்டது. அருட்தந்தை. பீலிக்ஸ் கிளாக்சன் இயேசுசபை அடிகளார் ஓலைக் குடிலாய் இருந்த புனித இஞ்ஞாசியார் ஆலயத்தினை 1952 இல் கல்லினால் கட்டிக் கூரை போட்டு மெருகூட்டினார். இவ்வேளையில் 25.10.1952இல் ஆயர் அதிவந். இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை அவர்கள் பங்குகளின் எல்லைகளைத் தீர்மானித்துப் புதிய பங்குகள் உருவாக்கப்பட்ட வேளையில் புனித இஞ்ஞாசியார் ஆலயமானது புனித செபஸ்தியார் ஆலயம் - புளியடிக்குடாப் பங்கின் ஒரு பகுதியாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

1960களில் இப்பகுதியினை நோக்கி மக்கள் குடியேறத் தொடங்கினர். கத்தோலிக்க மக்களும்; பறங்கி இனத்தவரும் கணிசமான அளவு சென்று குடியேறலாயினர். இவ்வாறு அதிகரித்த தொகையினராகக் கத்தோலிக்க மக்கள் வாழ்ந்து வந்த வேளையில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ந் திகதி அடித்த சூறாவளியினாலும், வெள்ளப் பெருக்கினாலும் இப்பகுதி வாழ் மக்களும், அவர்களுடைய வதிவிடங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. புனித இஞ்ஞாசியார் ஆலயமும் தரைமட்டமாகியது. அக்காலப்பகுதியில் பங்குத்தந்தையாக விளங்கிய அருட்தந்தை. **F.X.** மேயர் அடிகளார் புதியதோர் ஆலயத்தை அமைத்தார். இருந்தபோதும் இப்பகுதியில் கத்தோலிக்க மக்களின் தொகை கணிசமான அளவு அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் இவ்வாலயம் மக்களை உள்ளடக்கப் போதாமல் இருந்தது.

இதனால் 1992ம் ஆண்டளவில் அக்காலப்பகுதியில் பங்குத் தந்தையாக இருந்த அருட்தந்தை. யோசப்மேரி இயேசுசபை அடிகளாரின் முயற்சியினால் புதிய ஆலயம் அமைக்கும் பணிகள் 1992ம் ஆண்டு ஜனவரி 15ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் அப்போதைய ஆயர் அதிவந்தனைக்குரிய கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வாலய நிர்மாணப் பணிகளில் அப்போது துணைப் பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி. ஜோயல் இயேசுசபை அடிகளாரின்




மத்தியு எனும் நல் ஒளி முத்து
நித்தி யத்தில் இளைப்பா றுது இன்று;
காலனவன் கவர்ந்தனன் அவ ருயிரை
முடியுமோ அவனால் கட்ட ஒரு சுவரை,
தடுப்பதற்கு பாரெங்கும் பரந்த அவர் புகழை
ஆற்றினார் அவர் கல்முனையில் கல்விப் பணி
உயர்ந்தது சமூகம் கல்வியிலர் சிறந்து நனி

வாழும்போதும் அவன் ஒரு நல் லாசான்!
மரணத்திலும் அவன் ஒரு நல் லாசான்!

ஆசானே! பாடுபட்டு அவனை மனித னாக்கு
எண்ணாதே "இல்லை" யென்று எவரும் உனக்கு;
ஓடிவந்து சுமந்திடுவார் உனது பேழை தனை,
நீ வளர்த்து விட்ட உன் மாணாக்கர் சேனை
என்று கற் பித்த மத்தியு நல் லாசான்
இறை மடியில் நிச் சயம் துயின் றிடுவான்.

வாழும் போதும் அவன் ஒரு நல் லாசான்!
மரணத்திலும் அவன் ஒரு நல் லாசான்!

**D. பென்ஜமின்,**
**ஓய்வு நிலை அதிபர், கல்முனை.**

பங்கு கணிசமானது ஆகும்.

பின்னர் 2000.01.17ம் திகதி ஆயர் அவர்களால் கல்லடி டச்பார் ஒரு தனிப் பங்காகவும், இயேசு சபையினரின் பராமரிப்புக்கு உட்பட்டதாகவும் பிரகடனம் செய்யப்பட்டது. அதன் முதல் பங்குத் தந்தையாக அருட்தந்தை. யோசப்மேரி இயேசுசபை அடிகளார் நியமிக்கப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து துணைப் பங்குத்தந்தையாக இருந்த அருட்தந்தை. ஜீவராஜ் இயேசுசபை அடிகளார் 06.08.2012ம் ஆண்டு முதல் பங்குத் தந்தையாகப் பொறுப்பெற்றார். இவர் ஏற்கெனவே நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்த ஆலய அபிவிருத்திப் பணிகளை முழு மூச்சுடன் செயற்படுத்தினார். அவரைத் தொடர்ந்து 2014ம் ஆண்டு ஆவணி மாதமளவில் புதிய பங்குத் தந்தையாக வந்த அருட்தந்தை. லோறன்ஸ் இயேசுசபை அடிகளாரும் நூற்றாண்டை முன்னோக்கியதாகப் பல திட்டங்களை வகுத்து செயற்படுத்திக் கொண்டு வந்தார்.

இவரைத் தொடர்ந்து 2016 ஜனவரியில் புதிதாகப் பணிபுரிய வருகை தந்த பங்குத்தந்தை அருட்தந்தை. சுவக்கின் றொஷான் இயேசுசபை அடிகளார் ஆலய நூற்றாண்டினை வெகு விமரிசையாகவும், ஆன்மீக ரீதியாகவும் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களைப் பங்குச் சபையினருடனும், பங்கு மக்களுடனும் இணைந்து மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், எமது ஆலய நூற்றாண்டு விழாவுக்கு ஆயத்தமாக 22.07.2016ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2016 யூலை 31ம் திகதி எமது மறைமாநில ஆயர் யோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் திருவிழா திருப்பலியுடன் நிறைவுபெற்றது.

**- பங்குத் தந்தை -**
புனித இஞ்ஞாசியார் ஆலயம்,
கல்லடி, டச்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்கத் திருமறை

க.பொ.த. சா/தர் மாணவர்களுக்கானது

தரம் - 11
பாடங்கள் 9-10

பகுதி - II

• போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

02).

**1. தூய ஆவியானவரினால் எம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் ஆன்மீகக் கொடைகளைத் தருக?**
- ஞானம் நிறைந்த பேச்சு
- இறைவாக்கு உரைக்கும் வரம்
- விசுவாசம்
- ஆவிகளைத் தேர்ந்து தெரியும் திறன்
- நோய்களைக் குணமாக்கும் வரம்
- பரவசப் பேச்சு
- புதுமை செய்யும் ஆற்றல்
- பரவசப் பேச்சை விளக்கும் திறன்

**2. பரிசுத்த ஆவியின் கொடைகள் எச்சந்தர்ப்பத்தில் எமக்கு உதவுகின்றன?**
- நாம் தீர்மானங்களை எடுக்க நேரிடும் போது
- அறிவுசார் தீர்மானம் எடுப்பதற்கு
- வாழ்வின் அர்த்தத்தை தெரிந்துகொள்வதற்கு
- சரியான முடிவுகள் எடுப்பதற்கு
- பிறருக்கு அறிவுரைகள் வழங்குவதற்கு
- சரியானவற்றைப் பயமின்றி எடுத்துரைப்பதற்கு
- பிழையானவற்றை ஏற்றுக்கொள்ளாதிருப்பதற்கு
- இறைவனைப் புகழ்வதற்கும், வணங்குவதற்கும்

**3. தூய ஆவியின் வழிநடத்துதலில் வாழ்பவர்களின் இயல்பு யாது?**
- ஊனியல்புக்கு அடிமையாகமாட்டார்கள்
- கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள்
- இறை உறவினால் எப்போதும் ஆன்மீக வாழ்வு பெறுபவர்கள்
- பாவத்துக்கு மரித்து புதுவாழ்வுக்கு உயிர்த்தவர்கள்
- ஆன்மீகச் செயல்களை முழுமனதுடன் விரும்புவர்கள்
- வாழ்வில் அமைதியை விரும்புவர்கள்
- இறுதியில் விண்ணகப் பேற்றினைப் பெற காத்திருப்பவர்கள்

03).

**1. நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறை யாது?**

- திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும், இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள்.

**2. நற்கருணை ஒற்றுமையின் உணவாகும். இந்த உணவை அருந்தும் நீர் ஒற்றுமையின் அடையாளமாக எவ்வாறு விளங்குவீர்?**
- மற்றவர்களோடு ஒற்றுமையாக வாழ்தல்
- மற்றவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளல்
- இன, மத பேதங்கள் பாராது அனைவரையும் சகோதரத்துவத்துடன் ஏற்றுக்கொள்ளல்
- பகிர்ந்து வாழ்தல்
- பிறருக்குப் பணிபுரியத் தன்னைத் தாழ்மையாகவும் தியாகத்துடனும் அர்ப்பணித்தல்

**3. நற்கருணை விருந்தில் பங்குகொள்ளும் நாள் எவ்வாறு வாழ வேண்டும்?**
- சுயநலம் மறுத்து பொதுநலம் தேடவேண்டும்.
- தியாக வாழ்வு வாழவேண்டும்
- அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும்
- சமுதாயத்தில் ஒதுக்கி வைக்கப்பட்டோருடன் அன்புறவு கொள்ள வேண்டும்
- பசி தாகத்தோடு இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

04).

**1. ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தடைகள் எவை??**
- பிழைகளுக்குக் காரணம் காட்டிச் சந்தர்ப்பத்தை தவற விடுதல்.
- தாம் பாவம் செய்யவில்லை என நினைத்தல்.
- பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுவதற்கு ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற வேண்டுமா என நினைத்தல்.
- தாம் தனியாகப் பாவங்களை நேரடியாக இறைவனிடம் கூறி மன்னிப்புப் பெறலாம், என நினைத்தல்.
- திருப்பலியில் மன்னிப்பு வழிபாட்டில் ஒப்புரவாக்கிக் கொள்ளலாம் என நினைத்தல்.


**2. பாவங்களை நாம் ஏன் குருவின் முன்னிலையில் அறிக்கையிட வேண்டும்?**

நாம் இறைவனுக்கும், மனிதனுக்கும் எதிராகப் பாவம் செய்வதால் எம் பாவங்களைக் கடவுளுக்கும், மனிதருக்கும் இடைநிலையாளராகச் செயற்படும் குருவின் முன்னிலையில் பாவத்தை அறிக்கையிட வேண்டும்.

- தொடரும் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னடக்கம்

தன்னைத்தானே பெருமையாக எண்ணாத உள்ளம்; பேசாத வாய் - இவற்றைப் பெற்றவர்களே தன்னடக்கம் உடையவர்கள்.

ஐசக் நியூட்டன் என்பவர் மிகப் பெரும் விஞ்ஞானி ஆவார். அவர் இரவு பகல் பாராமல் பல நாட்கள் ஆராய்ந்து விஞ்ஞானக் குறிப்புகளை எழுதித் தம் மேசை மீது வைத்திருந்தார்.

ஒருநாள் அவரால் அன்புடன் வளர்க்கப்பட்ட நாய் வந்தது; மேசை மீது ஏறியது; விளக்கைத் தட்டிவிட்டது. எரிந்துகொண்டிருந்த விளக்கு நியூட்டனின் குறிப்புகள் அனைத்தையும் எரித்துச் சாம்பலாக்கிவிட்டது.

வெளியே சென்றிருந்த நியூட்டன் அறையின் உள்ளே வந்தார்: நியூட்டனின் நிலைமை எப்படி இருந்திருக்கும்? எண்ணிப் பாருங்கள்!

ஆனால், அவர் என்ன செய்தார் தெரியுமா? நாயை அன்புடன் தன்னருகே அழைத்தார்; அதுவும் வாலை ஆட்டிக்கொண்டு அவர் அருகே வந்தது. அதனை அவர் அடிக்கவில்லை; ஆதரவாகத் தட்டிக் கொடுத்தார்.

கோபம் கொள்ள வேண்டிய நேரத்தில் அதனை அடக்கிக் காக்கும் தன்னடக்கம் நியூட்டனிடம் இருந்தது. அவர் உலக மேதை ஆனார். விஞ்ஞான மேதையான ஐசக் நியூட்டன் தன்னைப் பாராட்டியவர்களுக்கெல்லாம் சொன்ன பதில் என்ன தெரியுமா?

“கடற்கரையில் எவ்வளவு கூழாங் கற்கள் கிடக்கின்றன; அவற்றைப் போல எத்தனையோ உண்மைகள் கண்டு பிடிக்கப்படாமல் இருக்கின்றன. நான் கண்டுபிடித்த உண்மைகள் ஒரு கூழாங்கல் அளவே”

இதுதான் அவர் கூறிய பதில். எவ்வளவு தன்னடக்கம்.

ஆதி பிதா ஆதாமின் மூத்த மகன் காயின்; இளைய மகன் ஆபேல். மூத்தவன் மூர்க்கக் குணம் படைத்தவன். பயிர்த் தொழில் செய்தான். இளையவனோ சாதுத் தன்மை படைத்தவன், ஆடு மாடுகளை மேய்த்து வந்தான். காயின் தான் விளைவித்த விளை பொருட்களில் சிறு அளவினையே இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். ஆபேலோ தான் வளர்ப்பவற்றுள் முதல் தரமான ஆடு, மாடுகளை இறைவனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். இறைவன் ஆபேலின் மீது பிரியம் கொண்டார். ஆபேலின் செல்வம் மேலும் வளர்ந்தது. காயினோ மன அடக்கம் இல்லாதவன். ஆபேல் மீது பொறாமை கொண்டு ஒரு நாள் அவனைக் கொன்றுவிட்டான்.

காயினுடைய பொறாமைக் குணம், அவன் உடன் பிறந்தவனைக் கொல்லத் தூண்டியது. காயின் அழிவுப் பாதையில் சென்றான். அதனால் அவன் துன்புற்றான். இது திருவிவிலியத்தில் சொல்லப்பட்டுள்ள வரலாறு.

அடக்கமின்மை அழிவுக்கே
வழி காட்டும்;


அடக்கமே அமரருள்
உய்க்கும்.

☐ நன்றி - ☐
‘நல்லொழுக்கக் கல்வி’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இரக்கத்தைச் சுவைப்போம்!



இறைவனின் இரக்கத்தைப் பற்றிச் சிந்திக்கும் நாம் அதனைச் சுவைத்து அனுபவித்த என்னையும், உங்களையும் போன்ற மிக மிகச் சாமானியர்களான சிலரைப் பற்றியும் அறிவோம்.

இயேசுவின் நாட்களில் வாழ்ந்த கள்வன் ஒருவனை நாம் முதலில் நோக்குவோம். அவனுக்கும் ஏறக்குறைய இயேசுவின் வயது இருக்கலாம். இயேசுவுக்கும் அவர் மரிக்கும் வேளையில் வயது 33தானே? அல்லது இக் கள்வனுக்கு இயேசுவைவிட ஒன்றிரண்டு வயதுகள் குறைய அல்லது கூட இருக்கலாம். அவன் பிறப்பு முதல் கள்வனாக இருந்தானோ அல்லது வாழ்வின் இடை நடுவில் திருட்டுத்தனத்தைக் கைக்கொண்டானோ தெரியவில்லை.

இவனையும், இவனோடு இன்னுமொரு கள்வனையும் இயேசுவோடு சிலுவையில் அறைந்து கொல்லக் கொண்டுவந்தார்கள். ஒருவனது பெயர் எஸ்தஸ், அடுத்தவனுடைய பெயர் தீமாஸ். இயேசுவை முதலில் சிலவை மரத்தில் அறைந்து அவர் சிலுவை மரத்தை நாட்டிய பின் இக்கள்வர்கள் இருவரையும் இரண்டு சிலுவைகளில் ஏற்றி உயர்த்தி வைத்தார்கள். இப்போது இயேசு நடுவிலும் அவரது வலது பக்கத்தில் ஒரு கள்வனும், அவரது இடது பக்கத்தில் மற்றொரு கள்வனுமாகச் சிலுவைகளில் உயர்த்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறு கள்வர்களோடு கள்வனாக இயேசுவைக் காட்டி மகிழ்கிறார்கள்.

அங்கு நின்ற போர் வீரர்களும், ஏனையோரும் இயேசுவைப் பரிகாசமாய்ப் பேசுவதையும், அவமானமாகக் கதைப்பதையும் இவர்கள் இருவருமே பார்த்தும் - கேட்டும் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இருவருக்குமே இயேசுவை நன்கு தெரிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. அதே ஊரில் இவர்களும் வாழ்ந்தவர்களாய் இருக்கலாம். அக்காலத்தில் இயேசுவை அறியாதோர் அவ்வூரில் இருந்திருக்க நியாயமில்லை. காரணம் இயேசு மரித்தவர்களை உயிர்ப்பித்தவர். அப்பங்களையும், மீன்களையும் பலுகச் செய்து அனேகருக்கு உணளித்தவர்.

■ ஜே. பத்திநாதன் ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுற்றோரை நலமாக்கியவர். அற்புதங்கள் பல செய்தவர். இதனால் பலரும் இயேசுவை அறிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது.

இப்போது இந்த இரு கள்வர்களுமே நாங்கள் இயேசுவோடுதானே சிலுவையில் உயர்த்தப்பட்டுள்ளோம். இயேசு அற்புதம் செய்யலாம். அவர் தம்மையும் எங்களையும் இத்தண்டனையில் இருந்து காப்பாற்றிவிடலாம் என்று காத்துக்கொண்டும் இருந்திருக்கலாம். நேரம் கடந்து செல்ல, தங்கள் எதிர்பார்ப்பு கலைந்துபோக இயேசுவின் இடது பக்கக் கள்வன் மௌனம் கலைந்து வாய் திறக்கின்றான். "நீ என்ன இறைமகனா? நீ கடவுளின் மகன் என்றால் உன்னையும் காப்பாற்றி எம்மையம் காப்பாற்றலாம் அல்லவா?" என்று சத்தமிடுகிறான். இதற்கு இயேசு பதிலளிக்கவில்லை. அவரது வலது புறத்தில் சிலுவையில் அறையப்பட்டிருந்த கள்வன் வாய் திறக்கின்றான். "நீயும் நானும் செய்த தீய செயலுக்கான தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். இவர் ஒரு பாவமும் அறியாத மனுஷனாச்சே. இவரை இத்தனை பாடுகள் படுத்துகிறார்களே!" என்று கூறியவன், "ஆண்டவரே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னையும் நினைவிற்கொள்ளும்" என்றான். இயேசு மாயவித்தைக்காரனைப்போல் மாறி அவரையும் விடுவித்துத் தங்களுக்கும் விடுதலையைத் தரவேண்டும் என்று ஒருவன் எதிர்பார்க்க மற்றவன் நானும் இறக்கப் போகின்றேன். இயேசுவும் இறக்கப் போகின்றார். இருப்பினும், அவனது நம்பிக்கை இயேசு இறந்த பின்பும் ஆட்சி உரிமையோடு மீண்டும் வருவார் என்பதில் இருந்ததால், நம்பிக்கையோடு நீர் ஆட்சியுரிமையோடு வரும்போது என்னையும் நினைவிற்கொள்ளும்" என்று மன்றாடினான். அவனது நம்பிக்கைக்குக் கைமேல் பலன் கிடைக்கிறது. இயேசு வாய் திறந்து, "இன்றுதானே நீ என்னோடு கூடப் பரகதியில் இருப்பாய்" என்று உறுதிமொழி வழங்குகின்றார். வாழ்வில் பெரும் பகுதியைத் தவறாகக் கழித்தவன்கூட இறுதிநேர மனமாற்றத்தால் கடவுளது பேரிக்கத்தைச் சுவைத்து மகிழ்கின்றான். நாமும் மனம் மாறி அவர் இரக்கத்தைச் சுவைக்க இந்த இரக்க ஆண்டிலே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினால் என்ன?



# என்னைப்பார்க்கையில்...

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

## ஒப்பீடல்

எம்மில் பலருக்கும் உள்ள பெருவியாதி
அடுத்தாரோடு நம்மை ஒப்பிட்டு
நோக்குவதுதான்.
இந்த ஒப்புநோக்கு பல தடவைகளில் நம் வாழ்வை
நரகமாக்கி விடுவது கண்கூடு!
கைவிரல் அனைத்தும் ஒன்றுபோலிருந்தால்
கையின் அழகு கெட்டுவிடும்.
மனிதவாழ்வின் தத்துவமே வேறுபாட்டில்தான்
நிறைவு - முழுமை - என்பதாகும்.
மனிதனின் தனித்துவமும் அதனால்தான்,
அதிலேதான் வெளிப்படுகின்றது.
நமது பிரச்சினையை அடுத்தவருடன்
ஒப்பிட்டு நோக்குவது நமக்கு வரும் தொல்லைகளை
எந்தவகையிலும் குறைக்கப் போவதில்லை!
அதுபோல மற்றவர்களது வெற்றியை
நம் அனுபவத்தோடு சேர்த்துப் பார்ப்பது
நமக்கு அதைரியத்தைத்தான் கொடுக்கும்!
உண்மையாக எண்ணிப் பார்த்தால்......
நமக்கான பாதையை நாம் அமைத்துக் கொள்வதும்
சுலபத்தில் விட்டுக் கொடாதிருப்பதும்தான்
நம்மை உயர்வை நோக்கித் தள்ளிவிடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேசுவதும் ஒரு கலையே!

**"Happy Birthday to you...."** பாடி, கைதட்டி, மெழுகுவர்த்தியை ஊதி அணைத்து, கேக் வெட்டி ஒருவருக்கொருவர் மாறி மாறி ஊட்டி மகிழ்வதை மௌனமாக இரசித்துக்கொண்டு ஒரு பக்கம் வாளாவிருந்தேன். எனது உறவினரின் வீட்டுப் பிறந்த நாள் வைபவமது. சிறிது நேரம் இப்படியே சென்று விட்டது. இந்தவேளையில் எனக்குப் பக்கத்தில் எனக்குத் தெரிந்த விமலா வந்து அமர்ந்தாள். புன்முறுவலைப் பரிமாறிக்கொண்டோம். சிறிது காலத்தின் பின் அவளைக் கண்டதால் வழக்கமான விசாரணைகள் முடிந்தன. பின் என்ன பேசுவது எனத் தெரியவில்லை. ஆரவாரித்த சிறுவரையும், அவர்களை அதட்டும் பெற்றோரையும் நோக்கி என் கவனம் திரும்பியது.

விமலா ஆரம்பித்தாள், "நீங்க உடுத்துற சாறிகள் எல்லாம் மிச்சம் வடிவாயிருக்குது. நாங்க வீட்டில கதைச் சிக்கொள்ளுவம். இந்த சாறி கூட மிச்சம் வடிவாயிருக்கு. எங்க வாங்கினீங்க...?"



நானும் விலாவாரியாகக் கூறிய விபரங்களைக் கேட்டுக்கொண்டாள். இந்தவேளையில் யாரோ அவளை அழைக்கவே எழுந்து சென்றவள், சிற்றுண்டிகள் பரிமாறும் வேளையில் மீண்டும் என் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். அவள் ஒரு மருத்துவத் தாதி. எனவே, சில ஆரோக்கியக் குறிப்புகள் பற்றிக் கேட்டு விடலாமே என எண்ணினேன். எனக்கு *'Sugar'* என்பதால், அதுபற்றிக் கேட்கலாமெனக் கதைக்க வேறு எதுவுமின்றி ஆரம்பித்தேன்.

"நான் இந்தச் சாப்பாடுகளில் ஆகாத சிலவற்றைச் சாப்பிட்டா உடனே *Sugar* கூடுமா? ஏனென்டா, நான் கடும் பத்தியம். எதுவும் வாயில் வைப்பதில்லை. இப்ப *Cake* ஐச் சாப்பிடுறேனே அதுதான் கேட்டேன்", தெரிந்தும் தெரியாத, புரிந்தும் புரியாத என் வினாவைக் கேட்டவள்,

"நீங்க நாளைக்குக் காலையில இரத்தத் தச் சோதிச்சுப் பாருங்க. அப்ப தெரியும்" என்றாள்.

இந்த பதில் எனக்குத் திருப்தி தரவில்லை. என்றாலும், விடாக்கண்டனாக,

"நாங்க விரதம் இருக்கிற நேரத்தில *Sugar* கூடுமா? சிலர் நாங்க விரதம் இருக்கக்கூடாதென் றாங்களே" என்றேன். அவளும் சளைக்காமல், "அடுத்தநாள் காலையில இரத்தத்தச் சோதிச்சுப் பாருங்க, அப்ப தெரியும்..." என்றாள். மீண்டும் இந்த பதிலுக்கா நான் இவளிடம் பேசினேன் என்று நினைக்கத் தோன்றினாலும் நான் தொடர்ந்தேன் ... "நான் 'மெட்போமின்' மட்டுமே எடுப்பேன். சரி தானே?" என்றபோது அவளுடைய பேச்சின் போக்கு மாறியது.

- பாடுமீன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயருக்குப் பின்னால்

டிக்ஷனரி என்னும் ஆங்கிலச் சொல் 'டிக்ஷனேரியஸ்' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து வந்தது ஆகும். 'சொற்கோவை' என்பது இதன் பொருள். தமிழில் 'அகராதி' எனப்படுகின்றது.

சுனாமி என்பது ஜப்பானிய மொழிச் சொல்லாகும். 'சு' என்றால் துறைமுகம்: 'னாமி' என்றால் அலை. அதாவது 'துறைமுகத்தைத் தாக்கும் அலை' என்று பொருள்படும்.

"எந்த டொக்டர் மெட்போமின் மட்டும் தந்தது. அதத் தனிய எடுக்கக் கூடாதே. இவ்வளவு நாளும் உங்களுக்கு ஒண்டும் செய்யலியா? அப்படியெண்டா ஒரு டொக்டரிட்ட காட்டிப் போடுங்க'' என்றாள். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

சும்மா இருக்கமுடியாமல் ஏதாவது பேசலாமே என்று நினைத்தது இப்படியாகிவிட்டதே என என்னையே நொந்து கொண்டதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடியாது மௌனியானேன்.

சில மனிதர்களுக்குப் பிறருக்கு உதவும் விருப்பமில்லை. ஒருவர் நம்மிடம் கேட்பவற்றுக்கு முடிந்தவரை நாம நிந்த ஆலோசனைகளை வழங்குவதே நன்று. நம்மை நம்பிப் பிறர் கேட்பவற்றுக்கு அவர்களை மனச்சோர்வு கொள்ளச் செய்யும் வகையிலோ, மனப் பயம் கொள்ளச் செய்யும் விதத்திலோ பேசுவது சரியல்ல. இதை இன்று பலர் கடைப் பிடித்து வருகிறார்கள்.

நன்மை செய்யாவிடிலும் தீமை செய்யாதிருப்பதே நன்று. எதனைப் பேசுவதாக இருப்பினும் நயமாகப் பேசத் தெரிந்து வைப்பதே சாலவும் சிறந்தது. அது ஒரு கலையாகும் என்றால் மிகையாகாது.

## குறும்பா – 2



### கலை

இனியகலை வாழ்வினுக்கு இன்பம்
இதயங்கள் செழிக்குமுயர் அன்பில்
பனிபோலும் துயரமதைப்
பகலவனாய்த் தான் விரட்டும்
புனிதமுறு கலை வளர்ப்பீர் பண்பில்

நிலா தமிழின் தாசன்

## சிரித்தபடியே மரணமடைந்த கன்னியாஸ்திரி

ஆர்ஜென்டினா நாட்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கன்னியாஸ்திரி ஒருவர் சிரித்தபடியே மரணமடைந்த புகைப்படங்கள் இணையங்களில் பரவி வருகின்றன.

புவனஸ் அயர்சைச் சேர்ந்த கன்னியாஸ்திரி சிசிலியா மரியாவுக்கு கடந்த 6 மாதங்களுக்க முன் புற்று நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அன்பும், கனிவும் நிறைந்த மரியா, நோய் குறித்து கவலைப்படாமல் தொடர்ந்து இறை தொண்டாற்றி வந்தார்.

இந்நிலையில் சில நாட்களுக்கு முன்பு உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர் இறந்து போனார். "அனைவரும் அன்பை பகிர்ந்து கொள்ளுங்கள்" என்று இறக்கும் தறுவாயில் சிஸ்டர் மரியா கூறியவாறே உயிரிழந்தார். முகத்தில் புன்னகையுடன் உயிரிழந்த சிஸ்டர் மரியாவின் புகைப்படங்கள் தான் இவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்

## ஆஸ்துமா தீர்க்கும் தூதுவளை


தூதுவளையின் மருத்துவக் குணங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. இது சயரோகம், பிரைமரி காம்ளக்ஸ், ஆஸ்துமா, டான்சிலிட் டீஸ், தைராய்டு கட்டிகள், வாயில், கன்னத்தில் ஏற்படும் கட்டிகளுக்கும் காதில் ஏற்படும் எழுச்சிக் கட்டிக்கும் பயன்படுகிறது. சளியைக் கரைக்கும் தன்மைக்கு முதலிடம் பெறுகிறது. தைராய்டு கட்டிகள் தோன்றியவுடன் தூதுவளை யைப் பயன்படுத்தினால் நிரந்தரத் தீர்வு காணலாம்.

தூதுவளை இலையைச் சேகரித்துச் சுத்தம் செய்து, பதினைந்து முதல் ஐம்பது கிராம் வரை எடுத்து, ஊற வைத்த அரிசி சேர்த்து அரைத்து ரொட்டியாகத் தயாரித்து காலை உணவாக மூன்று ரொட்டிக்குக் குறையாமல் இரண்டு மாதங்கள் சாப்பிட் டால் பூரண குணம் ஏற்படும். பதினைந்து தினங்கள் முதல் தொண்டைவலி குறைய ஆரம்பிக்கும். பிறகு படிப்படியாக நோய் நிவாரணம் அடையும்.

தூதுவளை இலை 15 கிராம் அளவில் சேகரித்து 500 மில்லி தண்ணீரில் போட்டு 200 மில்லியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி 30 முதல் 40 மில்லி வரை ஒரு நாளைக்கு மூன்று வேளை இந்த கஷாயத்தைச் சாப்பிட்டு வந்தால் இருமல், இரைப்பு, சளியுடன் கூடிய காய்ச்சல், சய ரோகக் காய்ச்சல் குணமாகும்.

தூதுவளை இலையைப் பொடி செய்து வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம். இப்பொடியை உபயோகிப்பதால் சளி இருமல் நீங்குகிறது. பசியை உண்டாக்கு கிறது. ஆஸ்துமா நோயாளிகள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம். இப்பொடியைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், நீரிழிவு கட்டுப்படும். இப்பொடி யுடன் திப்பிலிப் பொடியைச் சமமாக சேர்த்துத் தேனில் குழைத்துச் சாப்பிட்டால், இருமல் உடனே நின்று விடும்.

தூதுவளை இலையை நெய்யில் வதக்கி, துவையல் செய்து வாரத்தில் இரண்டு நாளாவது பயன்படுத்தினால் வாயுவைக் கண்டிக்கும். உடல் வலிமை ஏற்படும். மூலரோகப் பிணிகள் குறையும். தாம்பத்ய உறவு மேம்படும்.



ஆஸ்துமா நோயாளிகள், காலை வேளையில் வெறும் வயிற்றில் தூதுவளைச்சாறு 50 மில்லியளவு சாப்பிட்டு வந்தால், ஆஸ்துமாவினால் ஏற்படும் சளி, இருமல் கபத் தைப் போக்கும்.


தூதுவளையை அடிக்கடி பயன் படுத்தினால் புற்று நோய் வராமல் தடுக்கலாம். தொண்டைப் புற்று, கருப்பைப் புற்று, வாய்ப்புற்று ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சுரைக்காய் கூட்டு



தேவையானவை :

கடுகு - 1 ஸ்பூன், வெங்காயம் - 1,
தக்காளி - 1, பச்சைமிளகாய் - 2,
கறிவேப்பிலை - சிறிதளவு,
சுரைக்காய் - பாதி,
உப்பு - தேவையான அளவு,
எண்ணெய் - சிறிதளவு,
பயற்றம் பருப்பு - 25 கிராம், சீரகம் - 1 ஸ்பூன்,
மஞ்சள்தூள் - 1 ஸ்பூன்

செய்முறை :

முதலில் ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி அதில் கடுகு, வெங்காயம், தக்காளி, பச்சைமிளகாய், கறிவேப்பிலை போன்றவற்றை இட்டுத் தாளிக்க வேண்டும். பின்பு பயற்றம் பருப்பை வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்.

தாளித்த பிறகு சுரைக்காய் போட்டு வேக விடவும். அதன்பிறகு உப்பு, பயற்றம் பருப்பு, சீரகம், மஞ்சள்தூள் போட்டு வதக்க வேண்டும். கடைசியில் கறிவேப்பிலை போட்டு இறக்க வேண்டும். சூடாகச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

வற்றிற்கு தூதுவளை மருந்து மிக்க நல்ல பலன் கொடுத்துள்ளது. ஆய்வு மூலம் நல்ல மருந்தென நிருபிக்கப்பட்டுள்ளது.

புகைப்பழக்கம், மதுப்பழக்கம் போன்றவற்றின் பின்விளைவுகளான புற்றுநோய் எனக் கண்டறியப்பட்டால் ஆரம்ப நிலையிலே தூதுவளை இலையைப் பயன்படுத்தி, பூரண சுகாதாரத்தைச் சில மாதங்களிலே மீண்டும் பெற்று விடலாம்.

தூதுவளையின் மிக எளிய முறை உபயோகத்திலேயே பல நன்மைகளை அடைய முடியும். இதேபோல இதன் காயையும் சமைத்துச் சாப்பிட்டால் கப ரோகம் தீரும். பித்தவாயு இவைகள் நிவிர்த்தியாகும்.

அனைத்து இடங்களிலும் பயிராகும் மூலிகைகளில் இதுவும் ஒன்று. இதற்குத் தூதுவளை, சிங்கவல்லி, அளர்க்கம் என்று பல பெயர்கள் உண்டு. சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை.

எனவே, எம் அருகிலேயே உள்ள அற்புத மூலிகைகளைக் கொண்டு நலன் பெற வாழ்வோம்!




ஆசிரியர்
"தொண்டன்"

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்

"தொண்டன்" இதழில் அனைத்து அம்சங்களும் பயனுள்ளதாகவும், சிறப்பாகவும் அமைந்துள்ளன. குறிப்பாக, "விடுதலை வீரன், உலக அகதிகள் தினம்" இவற்றின் கருப்பொருட்கள் என்னைச் சிறிது நிஜத்தைச் சிந்திக்க வைத்தன. "தொண்டன்" மென்மேலும் சிறப்புற்று யாவரும் பயன்பெறும் வகையில் தொடர்ந்திட என் வாழ்த்துகள்!

வாசகி
- யே. ஜெயந்தி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகஸ்ட் - 2016

# புனிதர்களை அறிவோம்

- மற்றில்டா இராஜேந்திரம் -




## ஆகஸ்ட் 14ந் திகதி : புனித மக்சிமில்லியன் கோல்பே




ஜூலியஸ், மரியகோல்பே ஆகியோரின் அருந்தவப் புதல்வராகப் போலந்து நாட்டில் 1894ம் வருடம் தைத்திங்கள் 8ம் நாளன்று பிறந்தவர் ரேமன்ட் எனும் இயற்பெயர் கொண்ட மக்சிமில்லியன் கோல்பே. சிறுவயது முதற்கொண்டு கீழ்ப் படிதல் எனும் நற்பண்புடையவராகவும், அன்னை மரியா மீது அளவற்ற பற்றுக் கொண்டவராகவும் வளர்ந்தார். வீட்டில் உள்ள மரியன்னையின் படத்தின் முன் மண்டியிட்டுச் செபிக்கும் வழக்கம் கொண்டவர் இவர். அவ்வாறு ஒருநாள் செபித்துக்கொண்டிருக்கும் போது அன்னை மரியா காட்சி கொடுத்தார். அவர் தமது கைகளில் வெள்ளை மற்றும் சிவப்பு நிறக் கிரீடங்களைத் தாங்கி நின்றார். அன்னை மரியா அவரிடம், “இவற்றில் உனக்கு எது வேண்டும்? வெள்ளை நிறம் நீ எப்போதும் தூய்மையில் நிலைத்திருப்பாய் என்பதைக் குறிக்கிறது. சிவப்பு நீ மறைசாட்சியாய் இறப்பாயென்ப தைக் குறிக்கிறது” என்றார். மக்சிமில்லியன் தயக்கமின்றி “இரண்டையும் எனக்குக் கொடுங்கள்” என்றார். குடும்பத்தின் வறுமை நிலையால் பாடசாலை செல்லவில்லை. ஆனால், இவரது அறிவுக் கூர்மையால் கவரப்பட்ட ஒரு மருந்துக் கடைக்காரர் இவரை அழைத்து அவருக்குத் தானே கல்வி கற்பித்தார். பொதுத் தேர்வில் சித்திபெற்ற இவர் குருவாக விரும்பினார். இவரது அண்ணனும் இவருடன் சேர்ந்து இருவரும் புனித பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்தனர். 18 வயதிலேயே மக்சிமில்லியன் முதல் வார்த்தைப்பாட்டைக் கொடுத்தார். பின் மேற்படிப்புக்காக உரோமைக்கு அனுப்பப்பட்டார். அங்கிருந்தபோது கையின் பெருவிரலில் காயம் ஏற்பட்டுச் சீழ் பிடித்ததால், விரலை வெட்டவேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்தனர். ஆனால், புனித மரியன்னையின்மீது பக்திமிக்க இவர் புனித லூர்த்து அன்னைத் திருத்தலத் தண்ணீரை விரலில் தடவவே அற்புதமாகக் குணமடைந்தார். உரோமையிலிருந்து போலந்து திரும்பிய ஒரு சில மாதங்களில் 1939ம் வருடம் புரட்டாதி மாதத்தில் ஹிட்லரின் படைகள் போலந்தைத் தாக்கின. இவரைக் கைது செய்து வார்சாவின் சிறையிலடைத்தனர். ஒரு தடவை பட்டினிச் சாவுக்குத் தீர்வையிடப்பட்ட 10 பேரில் ஒருவருக்குப் பதிலாகத் தான் சென்றார். நாட்கள் கடந்தன. 9 பேரும் மெல்ல மெல்ல இறந்தனர். 10வது ஆளான மக்சி மில்லியன் உயிரோடு இருந்தார். அவரை விஷ ஊசி போட்டு 1941ம் வருடம் ஆவணித் திங்கள் 14ந் திகதி யன்று கொலை செய்தனர். புனிதரான திருத்தந்தை 2ம் அருள்.சின்னப்பர் 1982ம் வருடம் ஐப்பசித் திங்கள் 10ம் நாள் இவரைப் புனிதராக உயர்த்தினார்.

## ஆகஸ்ட் 28ந் திகதி : புனித அகுஸ்தின்

இவர் வடக்கு ஆபிரிக்காவிலுள்ள தகாஸ்தே எனுமிடத்தில் கி.பி. 354ம் வருடம் கார்த்திகைத் திங்கள் 13ந் திகதி பிறந்தார். தாயின் பெயர் மோனிக்கா, தந்தையின் பெயர் பத்ரீசியுஸ். தந்தை ஆரம்பத்தில் பிற தெய்வங்களை வணங்கினாலும், மனைவியின் கிறிஸ்தவ வாழ்க்கை முறையினால் ஈர்க்கப்பட்டுக் கிறிஸ்தவப் பறையை ஏற்றுத் திருமுழுக்குப் பெற்றார். அகுஸ்தினுக்கு ஆரம்பத்திலேயே நல்ல கிறிஸ்தவக் கல்வி கிடைத்தது. மேற்படிப்புக்கு கார்த்தேஜ் எனுமிடத்திற்கு அனுப்பப் பெற்றோர் தீர்மானித்தாலும் பணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரட்டப் பல மாதங்கள் சென்றன. இந்த இடைப் பட்ட காலத்தில் அகுஸ்தின் உலக இன்பங்களில் திளைத்தார். செபிப்பதையும் கைவிட்டார். கார்த்தேஜ் சென்று படிப்பை ஆரம்பித்தாலும், அவரது இந்நிலை மோசமானது. தாய் மோனிக்கா இவரை நல்வழிப்படுத்த எடுத்த முயற்சிகள் தோற்றன. சிற்றின்பத்திலும், தப்பறையான கொள்கைகளிலும் ஊறிப் போனார். இத்தவறான வாழ்க்கையால் மறை நூலைக் கற்ற போதிலும் அதில் அதிக நாட்டம் கொள்ளவில்லை. தாயோ இவர் மனம் மாற இடைவிடாது செபித்தார். படிப்பை முடித்த அகுஸ்தின் மாணவர்கட்கு இலக்கணம் கற்பிக்கும் பேராசிரியராகப் பணி புரிந்தவேளை யில், தமது புலமையாலும், மாணவருடன் பழகிய விதத்தாலும் அனைத்து மாணாக்கரின் மனங்களி லும் இடம்பிடித்தார். ஏறத்தாழ 9 வருடங்களாக 'மணிக்கேயம்' எனும் தப்பறைக் கொள்கையால் திசைமாறிய அகுஸ்தின் 383ம் வருடம் ஆயரான (புனித) அம்புறோஸ் ஆண்டகையைச் சந்தித்தமை அவரது வாழ்விலே ஒரு திருப்பு முனையானது. அவரது மறையுரைகளைக் கேட்கத் தவறாது ஆலயம் சென்றார். 30வது வயதில் தம்மைச் சுற்றியிருந்த மாயையில் இருந்து மீள ஆரம்பித்தாலும் முற்றாக முடியவில்லை. மறைநூலை வாசித்துக் கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொண்டார். கற்பு எனும் புண்ணியத்திற்காகச் செபித்தார். ஒருநாள் திருவிவிலியத்தை வாசித்தபோது அதில் உரோமையர் 13ம் அதிகாரம் 12ம் திருவசனத்தை வாசித்தவர் எழுந்து ஆயர் அம்புறோசிடம் சென்று காலில் வீழ்ந்து தன் தீச்செயல்களை இறைவன் மன்னிக்க வேண்டுமெனக் கேட்டார். பின்னர் 33வது வயதிலே முற்றிலும் மனமாற்றம் பெற்றவரானார். 37வது வயதில் குருவாகி, 42வது வயதில் ஆயருமானார். துறவறச் சபையொன்றையும் ஆரம்பித்தார். 430ம் வருடம் ஆவணித் திங்கள் 28ம் நாளன்று தமது 76வது வயதில் இறையடி சேர்ந்தார்.

## காணாமல் போனதையா!

காணாமல் போனதையா
என் ஆடுகள்
காணாமல் போனதையா!
வீணாக ஓநாய்கள்
விரட்டியே அடித்தடித்தே
காணாமல் ஆக்கினவோ!

கண்கண்ட சாட்சிகள்
இல்லையென்றே கூறினர் - ஆனால்
கர்த்தராம் கடவுள்தான்
கண்கண்ட சாட்சியே!

விண்வந்த மேகங்களும்
கண்ணீரைச் சொரியவே
மண்மீது மானிடங்கள்
காணாமல் போனதுவே

வகைகூறும் இடையர்கள்
பகையாக மாறினார்
தொகையாக ஆடுகள்
தொலைந்தன என்றாரே!

போனவை போனவைதான் - இனி
புதுவாழ்வு தொடங்குவோம்
ஆனது இதுவென்றால்
அது கண்டு வாழுவோம்!



- கலைக்கோட்டன் அ. இருதயநாதன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் அரசியல்

## குரங்கு ஆப்பு இழுக்கிறதா...? ஆப்பு வைக்கிறதா...?




- பாமுர்வேந்தன் -

இலங்கை அரசியல் களம் நாளொரு வண்ண மாக நிலைமாறிக் கொண்டிருக்கிறது. மகிந்த இராஜபக்ஷ தரப்பின் தவறுகளைச் சுட்டிப் பேசி மக்கள் ஆதரவைப் பெற்ற நல்லாட்சி, அது சொன்ன குற்றச்சாட்டுக்கு இலக்கா னவர்கள் ஒருவரையேனும் தண்டிக்கவில்லை. குற்றஞ் சுமத்துவதும், நீதிமன்றில் ஏற்று வதும் பின் விட்டு விடுவது மாக நீண்ட கயிற்றில் சிக் கிய மீனைக் களைக் கும் வரை இழுபட விடு கின்ற விளை யாட்டே நாளும் மேடையேறிக் கொண் டிருக்கிறது. இது மகிந்த தரப்பை உண்மையில் உற்சாக மடையப் பண்ணியிருக்கிறது. அது தனது குழப்பந்தரும் முயற்சிகளைத் தொடருவதால் பல சமயங்களில் அரசாங்கம் தடுமாறுவது வெளிப்படை. நிலைமை கையை மீறும் சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட ஒருவரை விசாரணைக்கு அழைப்பதும், கைது செய்வதும், அதனால் மூச்சுவிடச் சந்தர்ப்பத்தைத் தேடிக் கொள்வது மாக நல்லாட்சிதவழ்கின்றது.

இந்த சித்து விளையாட்டையே சிறுபான்மை மக்கள் விடயத்திலும், குறிப்பாகத் தமிழர் பிரச்சினையில் கையாள்கிறது. ஆனாலும் ஆப்பிழுத்த குரங்கு நிலைக்கு அது போய்க்கொண்டிருப்பதைக் கடந்த மாதம் மேடை யேறிய ஜெனிவா மனித உரிமைகள் கவுன்சில் தெளிவாக இட்டுக் காட்டியிருக்கிறது. மனித உரிமை ஆணை யாளரது அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 38 அம்சங்களுமே இலங்கைக்குப் பாதகமானவை தான். ஆனால் அதை ஏற்றுக்கொள்ள இலங்கை தயாராக இல்லை என்பதுதான் வேதனையான உண்மை! வெளிவிவகாரம் ஒன்றைக் கூற ஜனாதிபதி ஒன்றைக் கூற... நீதி மறுக்கப்படும் என்பது மட்டும் உறுதி!


எதையும் காலந் தாழ்த்திக் கொண்டு போவது அரசின் உத்தியாகும், காலப் போக்கில் எதையும் மறந்துவிடும் மனித மனங்க ளின் தன்மையை அறிந்து காலந் தாழ்த்துவதனூடாகத் தனக்கெதிரான அல்லது தான் நிறைவேற்ற விரும்பா தவற்றிற்கு ஆப்பு வைப்பதாக அது நினைத் துக் கொள்கிறது. 'காலந் தாழ்த்தின நீதி மறுக்கப் பட்ட நீதி' என்பதை அறிந்திருந்தே இத்தகைய போக்கினை இலங்கை அரசு கைக் கொண்டிருப்பது அதற்கு ஆரோக்கியமானதல்ல.

தமிழரை தலை நிமிர விடாமல் வெட்டி விட்டுக் கொண்டே சிங்களத் தரப்பு தன்னை பலப்படுத்திக் கொள்ளும் பணிகளைக் கைவிடுவ தாயில்லை. வேலைவாய்ப்பு நியமனங்களில் பெரும்பான்மையினருக்கு அதிக வாய்ப்புகள், அவர்களது பணியிடங்களோ தமிழ்ப் பிரதேசங் கள்! பௌத்தர் ஒருவர் கூட வசிக்காத தமிழ் மண்ணில் காணியைப் பலவந்தமாகப் பிடுங்கி விகாரைகள் அமைப்பது என்று சென்றுகொண்டி ருக்கிறது ஆதிக்க அராஜக முறைகள். சிங்கள மக்கள் இடம்பெயருகின்றபோது, அவர்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்ன விஷயங்கள் கைகொடுக்கும்



**குறிக்கோளை எட்டுவதற்கு:**

பயாஸித் என்ற சூஃபி ஞானியைத் தேடி ஒருவர் வந்தார். அந்த மசூதிக்குள் அவர் நுழைந்ததுமே பயாஸித் "உள்ளே இவ்வளவு பேர் வேண்டாம், தனியாக வா! என்னால் கூட்டத்தைச் சமாளிக்க முடியாது" என்று கூறினார். 'தனியாகத்தானே வருகிறோம்' என்று குழம்பிய சீடருக்கு, தன் மனதில் உள்ள எண்ணங்களைத்தான் பயாஸித் சொல்கிறார் என்று புரிந்தது. ஒரு வருட காலம், அந்த மசூதிக்கு வெளியிலேயே அமர்ந்து தன் எண்ணங்களை விரட்டினார். மனதில் கும்பலாக எண்ணங்கள் இருக்கும்போது குறிக்கோளை எட்டமுடியாது என்பதை உணர்த்தினார் பயாஸித்.

- ஜே.எச்.இரத்தினராஜா -

**வாழ்வைக் கவனியுங்கள் :**

"உங்களை அச்சு அசலாய் வரைந்து தருகிறோம்" என்ற அறிவிப்புப் பலகையைப் பார்த்துக் கூட்டம் அலை மோதியது. உள்ளே போனவர்கள் ஒவ்வொருவர் கைகளிலும் ஒரு நிலைக் கண்ணாடி தரப்பட்டது. கொந்தளித்த கூட்டத்தை அமைதிப்படுத்திய அதன் உரிமையாளர் சொன்னார், "உங்கள் மாற்றங்களை நீங்கள் உடனுக்குடன் உணர நிகழ் காலத்தின் மனச்சாட்சியாய் நிற்பதுதான் கண்ணாடி. ஓவியம் வரைந்து முடித்த விநாடியிலேயே அது கடந்த காலத்தின் பதிவாகிவிடுகிறது. நிகழ்காலத்தின் நிமிடமே நீங்கள். இந்த நிலைக் கண்ணாடி அதற்குத்தான்" என்றார் அவர். விநாடிக்கு விநாடி வாழ்வைக் கண்காணியுங்கள் வெல்வீர்கள்! ■

திருப்திப்படுத்த காட்டும் அவசரமும், முனைப்பும் தமிழ் மக்களுக்கு விடிவைத் தருவதில் ஏன் தாமதிக்கப்பட வேண்டும்? இலங்கையில் கொல்லப் பட்ட ஊடகவிலாளர்களுள் சிங்களவர்களின் விசாரணைகளில் காட்டும் முனைப்பு, தமிழ் ஊடக விலாளர்கள், அரசியல்வாதிகள் விடயத்தில் கிஞ்சித் தும் இல்லை? இது ஏன் புரியவில்லை!

எங்கள் தமிழர் தரப்பும் திடுதிம்மென்று விழிப்பதும், ஓடியாடித் திரிவதும் அடுத்த தேர்த லுக்கு மக்கள் ஆதரவைத் தக்கவைக்கும்படிச் செய்வதும், பிறகுஅடங்குவதுமாக! வெளிநாட்டில் புலம்பெயர்ந்தோர் அமைப்புக்கள் கூட சிறுகச் சிறுக அரசாங்கத்தின் கைகளுக்குள் அடக்கமாகிக் கொண்டு வருவதாக ஒரு உணர்வு! ரணில் விக்கிர மசிங்க ஒரு நரி! பிரித்துச் சிதைப்பது, பிறகு 'எப்படி என் வேலை?' என்று மார் தட்டுவதும் அன்னார்க்குக் கைவந்த கலை! இருப்பினும் இலங்கைத் தமிழர் இன்று வெளிநாடுகளை நம்பித்தான் உயிர் பிழைத் திருக்கின்றார்கள், அப்படி நம்பியதால்தான் உயிர்

> "நேர்மையானவர்கள் ஆட்சி செலுத்தினால்,
> குடிமக்கள் மகிழ்ச்சியுடனிருப்பார்கள்;
> பொல்லார் ஆட்சி செலுத்தினால் அவர்கள்
> புலம்பிக்கொண்டிருப்பார்கள்"
>
> **நீதிமொழிகள் 29:2**

வாழ்கின்றார்கள் என்பதே இன்றுவரை யதார்த்தம். வெளிநாட்டு தூதரகங்கள் இங்கு தூங்கிக் கொண்டி ருப்பதாக யாரும் நினைத்தால் அது தவறாகும். அவர்கள் முனைப்போடு பணி புரிகிறார்கள். தகவல் களைத் திரட்டி தம் அரசுகளுக்கு அனுப்புவதில் அவை தீர்க்கமாகப் பணியாற்றுவதாக ஜெனிவா மகா நாட்டு நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன. மனித உரிமை ஆணையாளரது அறிக்கை இதை எடுத்துக் காட்டு கின்றது. இப்போது கொத்துக்குண்டு விவ காரம் வேறு, பூதமாகக் கிளம்பி யுத்த முனைப்புக் கொண்டிருந்தவர்களை அச்சுறுத்துகிறது!

இலங்கை அரசு தனது வழமையான பெரும்பான்மைச் சிந்தனையோடு செயற்பட்டு ஆப்பு வைக்க முற்பட்டால், வைத்த ஆப்பினையே இழுத்த குரங்காகிவிடும் என்றே சொல்லவேண்டியிருக்கிறது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்பட்ட பின்னணி :

பிற இனத்தவனான கொர்னேலியுவின் மனமாற்றம் ஆனது, அவர் திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் இணைந்து கொண்டது திருத்தூதர் பணி நூலில் திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. ஏனெனில் இந்நிகழ்வு திருச்சபை வரலாற்றிலே மாபெரும் திருப்புமுனையாக அமைந்ததொரு விடயமாகும். ஏனெனில், இவரைப் பின்தொடர்ந்தே அனேக புற இனத்தவர்கள் கிறிஸ்தவத்தில் சேர்ந்தனர்.

கொர்னேலியுவின் மனமாற்றத்தைத் தொடர்ந்து செசாரியாவிலும், அந்தியோக்கியாவிலும், பவுலின் 1வது தூதுரைப் பயணத்தை அடுத்து மத்தியதரை நாடுகளிலும் புறவினத்தவர் திருச்சபையில் அனேகமாகச் சேர்ந்துகொண்டனர். யூதர்கள் கிறிஸ்துவை மெசியாவாக ஏற்க மறுத்தனர். ஆனால், புற இனத்தவர் பெருந்தொகையாக ஏற்றுக்கொண்டு திருச்சபையில் இணைந்து திருமுழுக்குப் பெற்றுக் கிறிஸ்தவத்தைத் தழுவலாயினர். இதன் விளைவாய்க் காலம் காலமாய் யூத மயமாய் இருந்த திருச்சபை படிப்படியாய்ப் புற இன மயமாய் மாற ஆரம்பித்தது. இதனை ஜெருசலேமில் வாழ்ந்த யூதப் பழைமைவாதிகள் விரும்பவில்லை.

எனவே, இப்புதிய சேரல் ஆனது ஆதித் திருச்சபையில் பெரும் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. இவ்வளவு காலமும் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை எனக் கருதி வந்த கிறிஸ்தவர்களின் மனதில் பல கேள்விகள் எழும்பலாயின. கிறிஸ்தவத்திற்கும் யூதத்திற்குமிடையே உள்ள தொடர்பு என்ன? கிறிஸ்தவம் ஒரு தனி மதமா? அல்லது யூதத்தின் ஒரு கிளையா? பிற இனத்தவர் கிறிஸ்தவத்தில் சேரும்போது நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகள் என்ன? அவர்கள் விருத்தசேதனம் செய்து கொள்ளாமல், மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடிக்காமல் ஒரு கிறிஸ்தவனாக இருக்க முடியுமா?

ஆரம்பத்தில் ஜெருசலேமில் வாழ்ந்த பாலஸ்தீனிய யூதர்கள் ஜெருசலேம் வந்திருந்த சிதறுண்ட யூதர்களுக்கும் மட்டுமே நற்செய்தி போதிக்கப்பட்டது. அவர்களே முதல் மனம் திரும்பி நற்செய்தியை ஏற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர். ஆதிக் கிறிஸ்தவர்கள் எல்லோருமே யூதர்களாய் இருந்தபடியாலும், அவர்கள் தொடர்ந்தும் ஜெருசலேம் ஆலயம் மற்றும் செபக்கூடங்கள் சென்று வழிபாடுகளில் பங்குபற்றியதாலும் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை எனும் கருத்தை இவர்கள் ஏற்றுக்கொண்டனர். அவர்களும் விருத்தசேதனம் பெற்றனர். மோசேயின் சட்டங்களைக் கடைப்பிடித்தனர். சட்டங்களை மதித்துத் தூய்மையான புதிய இஸ்ராயேலாய் இருந்தனர். ஆனால், காலப்போக்கில் புதிதாய் கிறிஸ்தவத்தை தழுவிய புறவினத்தவர் மத்தியில் இவை பெரும் சர்ச்சையாய் அமைந்தது. பல புறவினத்தவர் நற்செய்தியை ஏற்றுத் திருச்சபையில் சேர்ந்தனர். ஆனால், இவர்கள் விருத்த சேதனம் செய்யப்படாதவர்களாயும், மோசேயின் சட்டங்களை அறியாதவர்களாயும் இருந்தனர்.




இவர்கள் எந்த விதத்திலும் யூதர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LETTERS FROM OUR READERS

ஆசிரியர்
“தொண்டன்”

வணபிதா அவர்கட்கு!
வணக்கங்கள் அருட்தந்தையே!

“தொண்டன்” ஒவ்வொரு திங்களிலும் சூடாகவும், சுவையாகவும் விரைந்து வந்து விருந்தளிப்பதில் மகிழ்ச்சி. சமயக் குறிப்புகளுடன், சமையற் குறிப்புகளும் கமகமக்கின்றன. இதுதான் அரசியல், புனிதர்களை அறிவோம், நகைச் சுவைத் துணுக்குகள், திருஅவைச் செய்திகள், மாணவர் பக்கம் என இன்னும் பல அம்சங்களும் சிறப்பித்து நிறைவளிக்கின்றன. பாராட்டுகள்! வாழ்த்துகள்!


அன்புடன்
- நிலா தமிழின்தாசன்

தொடர்புபட்டவர்களாய் இருக்கவில்லை. இதனால், கிறிஸ்தவம் ஒரு தனி மதம், யூதத்தின் கிளை அல்ல. இது ஒரு புது மதம் எனும் கருத்துகள் தோன்றி இவர்களிடையே பிரிவுகளை ஏற்படுத்தின. மற்றும் பேதுரு கொர்னேலியு வீட்டிற்குச் சென்றது, உணவருந்தியது போன்றவற்றால் பிரச்சினை மேலும் வலுப் பெற்றது. எனவே, இப்பிரச்சினையானது வலுவடைந்து சீரியா, அந்தியோக்கியா போன்ற நாடுகளிலும் பரவலானது. கலாத்தியா, பிசிதியா, இக்கோனியா, லிஸ்திராவிலும் பரவியது. இதனால் பதற்றமும் கலகங்களும் ஏற்பட்டன. விருத்தசேதனம் செய்யாதவர்கள், மோசேயின் சட்டத்தைக் கடைப்பிடியாதோர் திருமுழுக்குப் பெறமுடியாது, திருச்சபையினைத் தழுவமுடியாது எனும் கருத்துகள் மேலோங்கின. இப்பிரச்சினை நாடு முழுவதும் பரவிற்று. ஆனால், பவுலும், பர்னபாவும் இதனை எதிர்த்து வாதாடினர். வாக்குவாதம் பெரும் சர்ச்சையாய் மாறியது. எனவே, இதற்கான தீர்வு காணவேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதனைத் தீர்க்கும் பொருட்டு பவுலும் பர்னபாவும் இன்னும் பலருடன் ஜெருசலேம் மூப்பர்களிடம் வந்தனர். இதன் பின்னணியில் அமைந்த முடிவே இக்கூட்டத்திற்கான ஜெருசலேம் பொதுச் சங்கமாகும். ●

# உலகெங்கும் மரியாளின் புகழ்...

## ஏழைகளின் அன்னை: பேனியூக்ஸ், பெல்ஜியம்.

16




பெக்கோ குடும்பத்தின் இல்லத்திற்குப் பின்புறமுள்ள ஒரு தோட்டத்தில் வணக்கத்திற்குரிய கன்னி மரியாள், 11 வயதான மேரியட் பெக்கோ என்ற சிறுமிக்கு 8 முறைகள் தோன்றி தரிசனம் அளித்ததாகக் கூறப்படுகிறது. 'ஏழைகளின் கன்னி' எனத் தன்னை அழைத்துக்கொண்ட அன்னை மரியாள், ஏழைகளுக்காகவும், நோயுற்றவர்களுக்காகவும், துன்புறுபவர்களுக்காகவும் இறைவனிடம் பரிந்து பேச வாக்குறுதி அளித்தார். இவரது இறுதித் தரிசனத்தின்போது, 'நானே மீட்பரின் அன்னை; கடவுளின் அன்னை; மிக அதிகமாக ஜெபியுங்கள்' என்று அன்னை அறிவித்தார். அதன்பிறகு, தனது கைகளை மேரியட் தலைமீது வைத்து சிலுவை அடையாளம் வரைந்து ஆசீர்வதித்தார். 'இறைவன் இல்லத்தில் நாம் சந்திக்கும்வரை வந்தனம்' என்று சொல்லி அன்னை விடைபெற்றார். 14 ஆண்டுகால விசாரணைக்குப் பிறகு இந்தத் தரிசனங்கள் திருச்சபையால் 1949அம் ஆண்டு அதிகாரபூர்வ ஒப்புதலைப் பெற்றன.

1985ஆம் ஆண்டின் பேனியூக்ஸ் நகருக்கு பயணம் மேற்கொண்ட புனித திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல், ஆலயத்தில் அன்னை மரியாள் காட்சியளித்த மேரியட்டைச் சந்தித்துப் பேசினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள்



திருத்தூதர் பவுல் தனது பணியின்பொருட்டு தெருபை, லிஸ்திரா ஆகிய இடங்களுக்குச் செல்கிறார். அவர் படித்தவர், நெஞ்சுறுதி மிக்கவர், கெட்டித்தனமுள்ளவர், திட்டமிட்டுச் செயலாற்றக்கூடியவர், எண்ணுகின்ற பணியை வெற்றிகரமாகச் செய்துமுடிக்க வல்லவர். இருந்தும் அவர் தம்மைச் சேர்ந்தவர்களோடு ஆசியாவுக்குப் போக எண்ணும்போதும், பின்னர் பித்தினியாவுக்கு செல்ல முற்படும்போதும் இறை வல்லமை அவர்களைத் தடுக்கிறது. அதை அவர்கள் அப்படியே ஏற்றுக்கொண்டு மாசிடோனியா சென்று நற்செய்திப் பணியை மேற்கொள்கின்றனர். என்னதான் ஆற்றலும், வல்லமையும், ஏன் இறை அருளும் அவர்களோடு இருந்துமென்ன அவர்கள் எங்கு போவது என்பதை இறை சித்தமே அவர்களுக்கு எடுத்துச் சொல்கிறது. அதற்கு அவர்கள் அடிபணிகின்றார்கள். அதுவரையிலும் அவர்கள் செய்த பணியில் அவர்கள் பெற்றிருந்த வெற்றிகள், அனுபவங்கள் எதுவுமே ஒரு பொருட்டாக அமையவில்லை. இறை சித்தமே நம் பாக்கியம் என்பதுபோல அவர்கள் சிந்தித்துச் செயற்படுகிறார்கள்.

நாமும் இறைவனால் ஒரு பணிக்கென்று தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்தான். அவரைப் பொறுத்தவரையிலும் நாம் பெறுமதிமிக்கவர்கள்., குறிப்பிடத்தக்கவர்கள். அவர் எங்களை அன்பு செய்கின்றார். எனவே, அவர் எமக்காகக் கொண்டிருக்கிற நோக்கத்தைச் சிதறடிக்கும்படியாக அவரே செயற்படமாட்டார் என்பதை நாம் ஐயமறத் தெரிந்துகொள்ள வேண்டும். நமக்கானவைகள், நமக்குரியவைகள், நம்மால் ஆகவேண்டியவைகள் எல்லாம் தேவையான வேளையில், தேவையான விதத்தில் எமக்கு இறைவனால் தெரியப்படுத்தப்படும். அதுவரை பொறுமையோடிருந்து, அதைத் தக்கபடி உணர்ந்து கொள்ளவேண்டியதுதான் எமது முதல் பணியாக இருக்க வேண்டும். பலவேளைகளில் நாம் பொறுமை கெட்டுப்போகின்றோம். இதனால் அவசரப்பட்டு நம் விருப்பு வெறுப்புகளுக்காகவே செயற்பட முனைகின்றோம். அதில் பெரும்பாலும் தோல்வியே காணுகின்றோம்.



எம் வாழ்வில் எதிர்பார்த்தவை, எதிர்பார்த்த நேரத்தில், எதிர்பார்த்தபடி நடைபெறாது விட்டால் கவலையுறத் தொடங்குகின்றோம். இறைவனில் சந்தேகங்கொள்ளத் தலைப்படுகின்றோம், அவநம்பிக்கை நம்மை ஆட்கொள்ளும்படி நம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுக்கொடுக்கின்றோம். எல்லாம் நல்லபடியாக நிறைவேறும், இறைவன் நிறைவேற்றுவார் என்கின்ற நம்பிக்கை நம் மனதில் அடிநாதமாக இருக்கவேண்டும். நாம் எதிர்பார்க்கின்ற மாதிரி காரியங்கள் நடக்காமல் போகலாம். அன்று அந்தத் திருத்தூதர் திட்டமிட்டபடி எதுவுமே நடக்காதிருந்தும், நடக்க வேண்டியது நடந்தே தீர்ந்ததல்லவா? அதேபோன்று நம்மால் ஆகவேண்டிய பணி ஏதோ ஒரு வகையில் நம்மாலேயே எப்படி ஆகவேண்டும் என்பது நியதியோ அப்படியே ஆகும்படி இறைவன் செய்வார் என்பதில் நமக்கு எள்ளளவும் சந்தேகம் வரலாகாது.



நமக்குரிய இலக்கை நாம் அடைவதை எவராலும் தடுக்கமுடியாது. அவர்கள் வல்லமையுள்ளவர்களாக இருக்கலாம், பலமுள்ளவர்களாக இருக்கலாம், சக்தி வாய்ந்தவர்களாகவும் அமையலாம். இருந்தும் அவர்களையெல்லாம் தாண்டி எங்கே, எப்படி எங்களைக் கொண்டு சேர்ப்பது என்றும், எப்படி உரிய காரியம் ஆக வைப்பதென்றும் இறைவன் அறிவார். அவரே கூறுகிறார்: "என்னை ஏற்றுக்கொள்ளாதவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. நீங்கள் உலகைச் சார்ந்தவர்களல்ல... அதினின்றும் உங்களைப் பிரித்து எடுத்துவிட்டேன். அதனால் உலகம் உங்களை அன்புசெய்யப் போவதில்லை. நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்"

ஆம்! அவர் தெரிந்துகொண்டவர்களைச் சிதறடிக்க அவர் அனுமதிக்கப்போவதில்லை. அதைத் தம் தந்தையிடமே அவர் எடுத்துச் சொல்லி இருக்கிறார்.

எனவே, நம்மை எந்தப் பணிக்கென அவர் தெரிந்தெடுத்திருக்கிறாரோ, அந்தப் பணி எம்மால் நிறைவேறுவதை அவர் நிச்சயம் நடத்திக் காட்டுவார். அவரில் ஆழ்ந்த நம்பிக்கையும், பற்றுறுதியும்தான் நமக்குத் தேவை. நம்மைச் சுற்றிலும் நடப்பவை நமக்கு இடறல் தரக்கூடும். இறைவனில் நமக்கிருக்கும் நம்பிக்கையை அசைக்க முயலக்கூடும். ஒன்றை மட்டும் நமது நினைவில் வைத்திருக்க வேண்டும். வாழ்க்கை என்பது எவருக்குமே என்றுமே சொகுசானதாக இருப்பதில்லை. சமயங்களில் மகிழ்ச்சியிருக்கும், சமயங்களில் கடினமாக இருக்கும். ஏற்றமோ இறக்கமோ எதிலும் நம்மைப்

## ஐரோப்பிய ஒன்றியத்தைத் துண்டாடும் முயற்சிக்கு திருத்தந்தை பிரான்சிஸ் கடும் எச்சரிக்கை

பொது வாக்கெடுப்பு மூலம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தைத் துண்டாடுவதற்கு எதிராகத் திருத்தந்தை பிரான்சிஸ் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கடந்த யூன் 24ம் திகதி பிரிட்டன் வெளியேறியது. இதனால் ஐரோப்பியப் பிராந்தியத்தில் நிச்சயமற்ற தன்மை நிலவி வருகிறது.

பொது வாக்கெடுப்பு மூலம் பிரிட்டன் வெளியேறியுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தைத் துண்டாடுவதற்கு எதிராக திருத்தந்தை பிரான்சிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாகச் செய்தியாளர்களிடம் திருத்தந்தை கூறியதாவது: "புது வகையான யூனியனை நாம் அமைக்கவேண்டி இருக்கிறது. இந்தப் பெரிய அமைப்பில், அதிகப்படியான நாடுகளைக் கொண்ட யூனியன் இயங்குவதற்கு, ஏதோ ஒரு சிக்கல் நிலவி வருகின்றது. இந்தப் பொது வாக்கெடுப்பைத் தொடர்ந்து ஸ்கொட்லாந்து, ஸ்பெயினின் கடலோனியா உள்ளிட்டவை பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தும் அபாயம் உள்ளது. மேலும் ஐரோப்பிய நாடுகளின் துண்டாடலுக்கும் இது வழிவகுக்கும். புதுமையான படைப்பாற்றல் மற்றும் யூனியனில் உள்ள நாடுகளுக்கு அதிக சுதந்திரம் வழங்குவதன் மூலம் நிலையற்ற தன்மையை மீட்டெடுக்க வேண்டும்" எனவும் அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமாக்கும் பாடங்கள் நிறைய இருக்கும். எனவே, இறைவனின் சித்தமும் அதுவாகத்தான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் பயணத்திலே நாம் பெற்றுக்கொள்ளும் அனுபவம் என்னும் பாடங்கள் நமக்கென இறைவனால் தீர்மானிக்கப் பட்ட பணியை நல்ல முறையில் நிறைவேற்றும் படியாக நம்மைப் பலப்படுத்தவேண்டும். எல்லாம் அவன் செயல் என்று, வாழ்வை வரும் போது பார்த்துக்கொள்வது நமக்கெல்லாம் ஒரு பலமாகவும், நிறைவாகவும் அமையும் என்பது திண்ணம். அன்று அவர் பணியாற்றிய திருத்தூதரும் அதையே செய்தார்கள். அவர்களே எதிர் பாராதளவு தம் பணிகளில் சாதித்தார்கள். இறைவன் அவர்களைக் கைவிடாது, கூடவே இருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டாரில்லையா?

- ஆனந்தா ஏ.ஜீ. இராஜேந்திரம் -

## சிந்திக்க சில வரிகள்... 16




தண்ணீருள் மீன் அழுதால் தெரிவதில்லை
பாருக்குள் பலர் துன்பம் புரிவதில்லை
யாருக்கு எத்துன்பம் என அறிந்து
அவர் கவலையை மாற்று ஆசி பெறுவாய்.

## திருஅவைச் செய்திகள்

▶ வத்திக்கான் என்பது ஒரு நிலப் பரப்பை உள்ளடக்கிய அரசு அல்ல. மாறாக, புனித பேதுருவின் வழித் தோன்றலாகப் பணியாற்றும் திருத்தந்தையுடன் தொடர்புடைய அம்சம் என வத்திக்கான் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் எஸ்டோனியாவின் டார்ட்டு பல்கலைக் கழகத்தில் ஆற்றிய உரையில் கூறினார்.

▶ அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில், 2018ம் ஆண்டு ஆவணி 22-26 வரை "குடும்பத்தின் நற்செய்தி, உலகின் மகிழ்வு" என்ற தலைப்பில் 9வது உலக குடும்பங்கள் மாநாடு நடைபெறவிருக்கிறது.


▶ நேபாளத்தில் ஓராண்டுக்கு முன்பு ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தால் போதுமான குடியிருப்புகள் இன்றி இன்னும் மக்கள் துன்புறும்வேளை, பெங்களூரைச் சேர்ந்த கத்தோலிக்கர்கள் 450 தற்காலிக குடியிருப்புகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்.



"இது பணக்காரங்க வீட்டுக் கல்யாணம்!"

"அதுக்காக அட்சதையா அரிசி போடுறதுக்குப் பதிலா துவரம் பருப்பு போடுறது நல்லாவா இருக்கு!"

- குமுதம் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஞானமுள்ளவரது அறிவுரை வாழ்வளிக்கும் ஊற்றாகும்; அது ஒருவரைச் சாவை விளைவிக்கும் கண்ணிகளிலிருந்து தப்புவிக்கும்"**

– நீதிமொழிகள் 13:14 –

உங்களில் ஆன்மீகம் உயிரோடிருந்தால், இதை விரும்புவீர்கள். உங்களில் ஆன்மீகம் இறந்திருந்தால் இதை வாசிக்க மாட்டீர்கள். நீங்கள் ஆன்மீகத்தில் ஆர்வமுள்ளவராக இருப்பின் உங்களிடத்தில் இன்னும் நம்பிக்கை உண்டு.

ஒவ்வொரு நாளும் ஆலயம் செல்லும் ஒருவர் தொடர்ந்து ஆலயம் செல்வது மதிப்பற்ற செயல் என்று கருதியதால் பத்திரிகை ஆசிரியருக்கு எழுதும் புகார்.

"30 வருட காலமாக நான் ஆலயம் செல்கிறேன். இக்காலத்தில் 3000ற்கும் மேலான மறையுரைகட்குச் செவிமடுத்துள்ளேன். ஆனாலும், அதில் ஒரு சிறு பகுதியையாவது எனது நினைவில் வைக்கமுடியவில்லை. அதனால் நான் எனது நேரத்தை வீணாக்கியதோடு, அருட்தந்தையர்களும் மறையுரையாற்றுவதில் தமது நேரத்தை வீணாக்கியுள்ளனர் என்றே நினைக்கிறேன்"


இக்கடிதம் பத்திரிகையின் ஆசிரியர் பக்கத்தில் வெளியிடப்பட்டுப் பெரும் சர்ச்சையை உருவாக்கியது. வாரங்கள் கடந்தன. ஒரு நபர் இதற்குச் சரியான பதிலை எழுதினார்.

"30 வருடங்களாகிவிட்டது எனக்குத் திருமணமாகி. இதுவரை காலம் என் மனைவி 32,000 உணவு வகைகளைச் சமைத்திருப்பாள். அப்படியிருந்தும் என் வாழ்வில் இப்போது ஒரு உணவையும் நினைவில் வைத்திருக்க முடியவில்லை. ஆனாலும், ஒன்று மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரியும். அந்த உணவுகள் அனைத்துமே எனது வாழ்க்கைக்கு ஊட்டச் சத்தும், எனக்கு உடல் வலிமையும் அளித்தன. நான் உழைக்கும்போது என் மனைவி இத்தகைய உணவுகளைக் கொடுக்காதிருந்தால் நான் இறந்திருப்பேன். அதேபோலவே, ஆலயத்துக்கு நான் செல்லாதிருந்தால், ஆன்மாவுக்கான ஊட்டச் சத்தின்றி இறந்தவனாகி இருப்பேன்".

நீங்கள் அனைத்தையும் இழந்து நிற்கும் வேளையிலே கடவுள் உங்களை உயர்த்த அனைத்தையும் செய்கிறார்.

நம்பிக்கை என்பது கண்ணுக்குத் தெரியாததைக் காண்பதும், வியக்கத்தக்கதை நம்புவதும், அசாத்தியமானதைப் பெறுவதும் ஆகும்.

கடவுளுக்கு நாம் நன்றி கூறுவோம். எமது உடலையும், ஆன்மாவையும் ஊட்டம் பெற வைத்தமைக்கு!



# ஆலயம் செல்வது ஏன்...?

– மதிவதனா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வன்னிக்காட்டினிலே வனப்புமிகு சூழலிலே,
கன்னிக்கொரு ஆலயமெனக் கட்டிக்காத்தே
அந்நியோன்யமாய் அழகுற வீற்றிருப்பவளே
அன்னையின் சந்நிதியே மருதமடுத் திருப்பதியே!

தஞ்சமென்று ஓடிவந்த அத்தனை பேருக்கும்
பஞ்சம் வராமல் பராமரித்து நிற்கும் - அன்பான
அஞ்சுகமே அன்னை மாதாவே மருதமடுவினின்று
நெஞ்சமெல்லாம் நிறைந்திட்ட மருதமடு மாதாவே!

படைக்கலம் கொண்டு பாதகர்கள் சீரழித்தாலும்
தொடை நடுங்கியவரையும் கருணையுடன் காத்து
அடைக்கலம் கொடுத்து அருள்மழை பொழிந்திட்ட
இடைவிடாத இனியநல் மருதமடு மாதாவே!

ஆறுதலும், அரவணைப்பும் அவளன்றோ
தேறுதலும், தேற்றமும் அளித்ததினாலே
மாறுதலும் மனப்பக்குவமும் பெற்றவர்க்கு - களி
கூறுதலும், ஞானஅறிவும் அளித்தவள் மருதமடுமாதாவே!

மருதமடுமாதாவே! மதிநிறை இராக்கினியே
பேருதவிகள் பல புரிந்திட்ட இனிய இரட்சகியே - உமது
திருப்பதிதனில் நம்பிக்கையுடன் வரும் பக்தர்களுக்கு
உருக்கத்தின் ஊழியத்தை அளித்திடு மருதமடுமாதாவே!

**பீ.ஐ. கைடிபொன்கலன்**

ஜேம்ஸ் ஹார்லிக் என்ற மருந்தாளுநர் 1875ல் குழந்தைகளுக்கான உணவு ஒன்றை ஆராய்ந்து உருவாக்கினார். அதற்கு 'ஹார்லிக்ஸ்' என்று தனது பெயரையே சூட்டினார்.




1890ம் ஆண்டு லன்ஸ் ஃபோர்டு ரிச்சட்சன் என்னும் கெமிஸ்ட் ஜலதோஷத்திற்கு மெந்தால் கலந்த மருந்து ஒன்றின் கண்டுபிடிப்புக்கு தனது நிறுவனத் தலைவர் டாக்டர் ஜோஷீவா விக்கின் நினைவாக 'விக்ஸ்' என்று பெயர் கொடுத்துவிட்டார்.



'எஸ்கிமோ' என்ற சொல்லிற்கு 'மாமிசத்தை உண்பவர்கள்' என்று பொருள். எஸ்கிமோக்கள் பச்சை மாமிசத்தை உண்பதால் அப்பெயரைப் பெற்றுள்ளனர்.



கிரேக்க மொழியில் 'தெர்மாஸ்' என்றால் 'சூடு' என்று பொருள். 'பிளாஸ்க்' என்றால் 'குறுகிய வாயுடைய குடுவை' என்று பெயர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருவிவிலியம் கற்போம் 158

நீதித் தலைவர்கள் - 18:6-31

பரிசுப் போட்டி

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.08.2016

## (சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

1. குரு அவர்களிடம் ''மன அமைதியுடன் செல்லுங்கள், நீங்கள் மேற்கொண்டுள்ள ...................... ஆண்டவர் கண்ணோக்கிப் பார்ப்பார்'' என்றதும் ஐவரும் புறப்பட்டு இலாயிசை வந்தடைந்த பொழுது, அங்கிருந்த மக்கள் அமைதியாக வாழக் கண்டனர்.

   அ) பயணத்தை ஆ) வியாபாரத்தை இ) வேலையை

2. நாடு எதிலும் குறைவற்றதாகவும், செழிப்புள்ளதாகவும் இருந்தது. சீதோனியரிடமிருந்து அம்மக்கள் தூரத்தில் இருந்ததால், அவர்களுடன் தொடர்பின்றியிருந்தது. அவர்கள் ......................, எசுத்தாவோலிலும் இருந்த சகோதரர்களிடம் திரும்பினர்.

   அ) இலாயிசிலும் ஆ) யூதேயாவிலும் இ) சோராவிலும்

3. அவர்கள் ''நீங்கள் கண்டதென்ன?'' எனக்கேட்க ''வாருங்கள். அவர்களுக்கு ...................... புறப்படுவோம். ஏனெனில், நாம் செழிப்பானதொரு நாட்டைக் கண்டோம். நீங்கள் எதுவும் செய்யப் போவதில்லையா? அதை உரிமையாக்கத் தயங்கவேண்டாம்'' என்றனர்.

   அ) தீமை செய்ய ஆ) எதிராக இ) முன்பாக

4. தாண் குலத்தார் 600 பேர் போர்க்கோலத்தில் சோராவிலிருந்தும், எசுத்தாவோலில் இருந்தும் புறப்பட்டு ...................... நாட்டுக் கிரியத்து யெயாரிமில பாளையமிறங்கியதால், அவ்விடத்தை ''மகனே தாண்'' என இன்றுவரை அழைக்கின்றனர்.

   அ) இஸ்ரயேல் ஆ) யூதா இ) எப்ராயிம்

5. அவர்கள் அங்கிருந்து புறப்பட்டு எப்ராயிம் மலை நாடு சென்று மீக்காவின் வீட்டை நெருங்கினர். இலாயிசு நாட்டை வேவு பார்க்கச் சென்ற ஐவரும் வந்து ''இவ்வீடுகளில் ஏபோது, தெராபிம், செதுக்கிய உருவம் ...................... ஆகியவை உள்ளன.''

   அ) உருவச் சிலை ஆ) பித்தளைச் சிலை இ) வார்ப்புச் சிலை

6. அவர்கள் மீக்கா வீட்டில் லேவியரான இளைஞரிடம் வந்து நலம் விசாரித்தனர். போர்க் கோலம் தாங்கிய 600 தாண் வீரரும் நுழைவாயிலில் நின்றபோது, ...................... உள்ளே சென்று செதுக்கிய உருவம், ஏபோது, தெராபிம் ஆகியவற்றை எடுத்தனர்.

   அ) ஐவரும் ஆ) வீரர்கள் இ) வேவுகாரர்

7. குரு அவர்களிடம் ''நீங்கள் செய்வது என்ன?'' எனக் கேட்க, அவர்கள் ''பேசாதே, எங்களுடன் நட, எங்கள் தந்தையாகவும் ...................... இருப்பாய். எது உனக்கு நலம், இங்கிருப்பதா? இல்லை ஒரு குலக் குருவாக இருப்பதா?'' என்றபோது, அவர் மகிழ்ந்து மக்களிடையே வந்தார்.

   அ) தலைவராகவும் ஆ) குருவாகவும் இ) கடவுளாகவும்

8. அவர்கள் பயணத்தைத் தொடர்ந்து மீக்கா வீட்டிலிருந்து சிறிது தூரம் சென்ற பின் அடுத்த வீட்டு ஆட்கள் ...................... மக்களைத் துரத்தினர். அவர்கள் மீக்காவிடம், ''உனக்கு என்ன வேண்டும்'' எனக் கேட்க, ''என்னிடமிருந்த தெய்வங்களையும், குருவையும் கொண்டு செல்கிறீர்களே'' என்றார் மீக்கா.

   அ) இலாயிஸ் ஆ) எப்ராயிம் இ) தாண்

9. தாண் மக்கள் மீக்காவிடம் ''விவாதம் செய்யாதே. செய்தால், இம்மக்கள் தாக்குவர்'' என்று சொல்ல மீக்கா திரும்பிச் சென்றார். அமைதியாக வாழ்ந்த இலாயிசு மக்களை வாளுக்கு இரையாக்கி நகரை ...................... . அவர்களைக் காப்பாற்ற யாருமில்லை.

   அ) எரித்தனர் ஆ) அழித்தனர் இ) கைப்பற்றினர்

10. தாண் மக்கள் நகரை மீண்டும் கட்டியெழுப்பினர். மேசேயின் புதல்வன் கெர்சோமின் மகன் யோனத்தானும், அவன் மக்களும் மக்கள் நாடுகடத்தப்படும்வரை குருக்களாயினர். மீக்கா செதுக்கிய ...................... தாண் மக்கள் வைத்திருந்தனர்.

    அ) உருவத்தை ஆ) தெய்வத்தை இ) சிலையை

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 158

## பரிசுப் போட்டி




(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

1. மிக நீளமான தேசிய நெடுஞ்சாலையைக் கொண்டுள்ள நாடு :
   (சீனா - கனடா - அவுஸ்திரேலியா)

2. 700க்கும் அதிகமான மசூதிகள் உள்ளதால் "மசூதியின் நகரம்" என்றழைக்கப்படும் நகரம் :
   (டாக்கா - மக்கா - இஸ்தான்பூல்)

3. அமெரிக்காவில் எடுக்கப்பட்ட முதலாவது ஆங்கிலப் படம் :
   (டென் கொமான்மென்றஸ் - பினாக்கியோ - ஒலிவர் டுவிஸ்ட்)

4. ஒல்லாந்தரால் துன்பப்பட்ட கத்தோலிக்கருக்கு ஆதரவளித்த மன்னன் 2ம் விமலதர்ம சூரியனின் தந்தை :
   (6ம் புவனேகபாகு - கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன் - 2ம் இராஜசிங்கன்)

5. 'பழகப் பழகப் பாலும் ..............................'
   (இனிக்கும் - புளிக்கும் - கசக்கும்)

6. 'ப்ப்' இடைநிலை ஏற்கும் வினைகளை மொழியியல் அறிஞர் அழைக்கும் சொல் :
   (வல்வினை - இடைவினை - மெல்வினை)

பெயர் : ..............................................................................................

முகவரி: ..............................................................................................

..............................................................................................


அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 158
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..................................................

முடிவுத்திகதி
31-08-2016

# சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 110



1. யோசேப்புக்கு இஸ்ரயேல் எதைச் செய்து கொடுத்தார்?

   விடை: ..........................................................................................

2. யோசேப்பின் சகோதரர்கள் அவரை ஏன் அதிகமாக வெறுத்தனர்?

   விடை:..........................................................................................

   ..........................................................................................

3. யோசேப்பு மீண்டும் கண்ட கனவு என்ன?

   விடை:..........................................................................................

   ..........................................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசேப்பும் அவர் சகோதரர்களும்
(தொடக்கநூல் 37:2-11)

**யோ**சேப்பு பதினேழு வயது இளைஞனாய் இருந்தபோது, தம் சகோதரரோடு மந்தை மேய்த்துக்கொண்டிருந்தார். அவர்தம் சகோதரர் செய்துவந்த தீச்செயலைப் பற்றித் தம் தந்தைக்குத் தகவல் கொடுத்தார். இஸ்ரயேல் முதிர்ந்த வயதில் தமக்கு யோசேப்பு பிறந்தமையால் அவரை மற்றெல்லாப் புதல்வரையும் விட அதிகமாக நேசித்து வந்தார். அவருக்கு அழகு வேலைப்பாடுகள் நிறைந்த ஓர் அங்கியைச் செய்து கொடுத்தார். அவரது சகோதரர்கள் தங்கள் தந்தை அவரை எல்லாரிலும் அதிகமாய் நேசிக்கிறாரென்று கண்டு அவரை வெறுத்தனர். அவர்களால் அவரரோடு பாசத்தோடு பேச இயலவில்லை. யோசேப்பு தாம் கண்ட ஒரு கனவைத் தம் சகோதரருக்குத் தெரிவித்தார். இதனால் அவர்கள் அவரை மேலும் அதிகமாய் வெறுத்தனர். அவர் அவர்களை நோக்கி, "நான் கண்ட இந்தக் கனவைக் கேளுங்கள். நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டும்பொழுது திடீரென எனது அரிக்கட்டு எழுந்து நிற்க, உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச் சுற்றி வணங்கின" என்றார். அப்பொழுது அவர் சகோதரர் அவரை நோக்கி, "நீ எங்கள் மீது உண்மையிலேயே ஆட்சி செலுத்தப்போகிறாயோ? நீ எங்கள் மீது உண்மையிலேயே அதிகாரம் செலுத்தப் போகிறாயோ?" என்று கேட்டனர். இவ்விதக் கனவுகளின் காரணமாகவும் அவரை அவர்கள் இன்னும் அதிகமாய் வெறுத்தனர். மேலும், அவர் தாம் கண்ட வேறொரு கனவையும் தம் சகோதரர்களுக்கு விவரித்தார். "நான் மீண்டும் ஒரு கனவு கண்டேன்: அதில் கதிரவனும் நிலவும் பதினொரு விண்மீன்களும் என்னை வணங்கக் கண்டேன்" என்றார். இதை அவர் தம் தந்தைக்கும் சகோதரர்களுக்கும் விவரித்தபோது, அவர் தந்தை அவரைக் கண்டித்து, "நீ கண்ட இந்தக் கனவின் பொருள் என்ன? நானும் உன் தாயும், உன் சகோதரர்களும் தரைமட்டும் தாழ்ந்து உன்னை வணங்க வேண்டுமா?" என்று கேட்டார். அதன் பொருட்டும் அவர் சகோதரர் அவர்மீது பொறாமை கொண்டனர். அவர் தந்தையோ இக்காரியத்தைத் தம் மனதில் கொண்டார்.

**(பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்: .................................................................)**

சேரல் :-

**வர்ணம் தீட்டும் போட்டி – இல. 110**

**தொண்டன்**

**அ.பெ. எண் – 44**

**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போட்டி முடிவுகள்...

## திருவிவிலியம் கற்போம் - 156 விடைகள்

பிடுங்கி, பெலிஸ்திய, வலிமை, சணல்கயிறு, புதிய, பாவு, சவரக்கத்தியால், மழிக்க, வெண்கல, இட்டு

## அறிவை வளர்ப்போம் - 156 விடைகள்

| | | |
|---|---|---|
| 1. ஜப்பான் | 2. தோமஸ் அல்வா எடிசன் | 3. 1689 |
| 4. ஐசக் ஆசிமோவ் | 5. மட்டம் | 6. ஓடினான் |

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

**போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- R. நிரோஷினி,
  கார்மேல் அருணோதயம்,
  அக்கரைப்பற்று.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்கள்**

- G. பியஷாந்,
  311, நீதிமன்ற வீதி,
  திருகோணமலை.
- வெங்கிட்டன் சிந்து,
  தேவகிராமம்,
  அலிகம்பை,
  அக்கரைப்பற்று - 142.
- பீட் றொன்ஸ்டன் டிலைல்,
  செல்வி தியேட்டர் வீதி,
  எல்லை நகர்,
  செங்கலடி.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 108 முடிவுகள்

- **முதலாம் பரிசு - 400/=**
  R. றொனிட்டன் தணுஸ்,
  புனித சூசையப்பர் சிறிய குருமடம்,
  விமான நிலைய வீதி,
  திருப்பெருந்துறை,
  மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு - 300/=**
  J. மேஷாக்,
  385/1. திருமலை வீதி,
  மட்டக்களப்பு.
- **மூன்றாம் பரிசு - 200/=**
  வ. ஷாறுக்ஷன்,
  3A, மருதடி வீதி,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்து வரும்



## இலங்கை வானொலி தேசிய சேவையில்

**கத்தோலிக்க நிகழ்ச்சிகள் – தமிழ்**

**ஆகஸ்ட் – 2016**

**கத்தோலிக்க நற்சிந்தனைகள் – காலை 5.55 மணி**

நாள் : 06, 07, 08, 09, 10, 11, 12
20, 21, 22, 23, 24, 25, 26

**புதிய உலகம் (வளர்ந்தோர் நிகழ்ச்சி) – மாலை 7.00 மணி**

நாள் : 14, 28

வழிபாடு, இறைவாக்கு, திருவிவிலிய நாடகம், சிந்தனை உரை, புனிதர்களை அறிவோம், திருச்சபைச் செய்திகள், பாடல்கள், சிறப்பு நிகழ்வுகள் இன்னும் ......

**சிறுவர் உலகம் (சிறுவர் நிகழ்ச்சி) – மாலை 4.00 மணி**

நாள் : 02, 16, 30

சிந்தனை உரை, கதையும் கருத்தும், திருவிவிலியக் கதைகள், நாடகம், பாடல்கள், சிறப்பு நிகழ்வுகள், இன்னும் ......

**நிகழ்ச்சித் தொகுப்பு :**

மற்றில்டா இராஜேந்திரம்

**தொடர்பு :**

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண் – 44,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org